# என்
# அழுகையும்
# ஆனந்தமும்

S. தாயப்பன்



“நீங்களே என் சாட்சிகள்; என்னைத்தவிர தேவனுண்டோ?” ஏசாயா 44:8

(சகோதரர் S.தாயப்பன் அவர்களின்
உயிரோட்டமுள்ள சாட்சியம்)

**Pastor D. Solomon Raja,**
**Glorious Zion Christian Assembly,**
**3, Mayur Avenue,**
**Chitlapakkam, Chennai - 600 064.**

## அறிமுகம்

கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த சகோதரர் தாயப்பன் அவர்களின் வாழ்க்கையில் கர்த்தர் செய்த அற்புதங்கள் சாட்சி நூலாக வெளிவருவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தரை துதிக்கிறேன்.

ஆழ்ந்த இந்து மத பக்தியில் வாழ்ந்து வந்த இவர் இயேசு கிறிஸ்துவின் அன்பையும், வல்லமையையும் எவ்வாறெல்லாம் அறிந்து உணர்ந்து கிறிஸ்துவுக்காய் வைராக்கியமாய் வாழ்ந்து வருகிறார் என்பதை விளக்கமாக எடுத்து கூறுகிறது இந்நூல். இவர்களின் அன்பு மகனாகிய கார்த்திக் வாழ்க்கையில் ஏற்பட்ட கொடுமையான வியாதியின் மூலமாக இயேசு இவர்களை சந்தித்த விதமும் இவர்கள் முழுக்குடும்பமும் ஆண்டவரை ஏற்று கொண்ட விதமும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூலை ஜெபத்துடன் படிக்கும் ஒவ்வொருவரும் விசுவாசத்தில் பலப்படுவது உறுதி.

சிட்டிலப்பாக்கம்,
சென்னை **64.**
**6.11.02.**

கிறிஸ்துவுக்குள்,
பாஸ்டர் D. சாலமோன் ராஜா

**Off. :**
Christian Media Centre - India
47, Eldams Road,
Teynampet,
Chennai - 18.

**Res.:**
6/25, Dr. K.V. K. Nagar,
Near Zion School,
Selaiyur,
Chennai - 73.

## அணிந்துரை

கிறிஸ்துவுக்குள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய ஒரு குடும்பம். அவர்களுடைய சொல், செயல் அனைத்திலும் முழு விசுவாசத்தின் ஒளியை அவர்களுடன் பேசுகின்ற ஒரு சில நிமிடங்களிலேயே காண இயலும். அந்த உற்சாகமும் விசுவாசமும் நம்மையும் பற்றிக்கொள்ளும்.

சகோதரர் தாயப்பன் அவர்களின் உயிரோட்டமுள்ள சாட்சி, கையெழுத்து வடிவில் என்னிடம் கொடுக்கப்பட்டது. கடந்த ஓராண்டுக்கு மேலாக நான் அவர்கள் குடும்பத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு பழக, அவர்களுக்காக, அவர்கள் மகன் கார்த்திக்காக ஜெபிக்க, வேதவசனங்களைப் பகிர்ந்து கொடுக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

கர்த்தர் அவர்கள் வாழ்க்கையில் செய்து வரும் அதிசயமான காரியங்களை என்னிடம் சொல்வார்கள். அவர்களுடைய பக்தி வைராக்கியத்தையும், உறுதியான விசுவாசத்தையும் என் கண் கூடாக நான் பார்க்க முடிந்தது.

கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ள இவர் மிகுந்த நேர்மையும், மனவலிமையும் நல்லொழுக்கங்களும் உடையவர். அவர்கள் எழுதியுள்ள இந்த புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரின் கண்களிலும் கண்ணீர் மல்கும்! இருதயத்தில் விசுவாசத்தை ஏற்படுத்தும்! இயேசுவுக்காக உண்மையாக வாழத்தூண்டும்!

இப்புத்தகத்தை ஆயிரக்கணக்கானோர் வாசித்து தேவ ஆசிர்வாதம் பெற வாழ்த்துகிறேன்!

***S. Sunder Singh***
President,
Chitlapakkam Christian Fellowship

# என் அழுகையும் - ஆனந்தமும்

## இயேசுவை இரட்சகராக அறிந்த என் சகோதரியின் மகன்

*“கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்” - அப் 16:31*

நானும் என் குடும்பத்தில் உள்ளவர்களும், மற்றும் என் உறவினர்கள் அனைவரும் மிகவும் ஆழ்ந்த பக்தியுள்ள இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். என் உடன் பிறந்த சதோதரியின் மூத்த மகன் சிறு வயது முதலே கிறிஸ்தவப் பள்ளிகளில் படித்து, கல்வியோடு அவர்கள் செய்த போதனைகளால் கிறிஸ்தவத்தின் மேல் ஓர் பற்றும், வாஞ்சையும் ஏற்பட்டு, முதன் முதலில் யாருக்கும் தெரியாமல் ஞானஸ்நானமும் எடுத்து ஒரு கிறிஸ்தவனாக மாறினான். அது முதற்கொண்டே எனக்கு கிறிஸ்தவ மதத்தின் பேரிலும், இயேசு கிறிஸ்துவின் பேரிலும் ஒரு வெறுப்பு வந்தது. அவனுக்கு திருமணம் முடிக்க என் சகோதரி முயற்சிகளை மேற்கொண்டபோது அவன் ஒரு கிறிஸ்தவப் பெண்ணைத்தான் மணந்து கொள்வேன் என பிடிவாதம் பிடித்தான். அவனுக்கு நல்ல புத்திமதிகள் கூறி அவன் எண்ணத்தை மாற்றி ஒரு இந்துப் பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் படி செய்ய என் சகோதரி என்னிடமும் என் அண்ணாவிடமும் வந்து முறையிட்டாள். எங்கள் இருவர் மீதும் மிகுந்த மரியாதை கொண்ட என் அக்காவின் மகன் நாங்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவன் சம்மதிக்கவே இல்லை. “டேய் நம் இந்து மதத்தை விட எந்த விதத்தில் கிறிஸ்தவ மதம் சிறந்தது? அப்படி நம் மதத்தில் இல்லாத எதைப் பார்த்துடா அந்த பாழாய்ப்போன கிறிஸ்தவ மதத்தில் மயங்கினாய்? ஒரு கிறிஸ்தவப் பெண்ணை நீ லவ் பண்ணிட்டு வந்து, மாமா... நான் இந்த கிறிஸ்தவப் பெண்ணை விரும்புகிறேன். எனக்கு கல்யாணம் செய்து வையுங்கள் என்று சொல்லு. இந்த உலகமே எதிர்த்தாலும் நான் முன்னால நின்று அந்த கிறிஸ்தவப் பெண்ணை உனக்கு கல்யாணம் செய்து வைக்கிறேன். அது எதுவும் இல்லாமல் நீ கிறிஸ்தவனாக மாறிட்டேங்கிற ஒரே காரணத்திற்காக, ஒரு கிறிஸ்தவப் பெண்ணைத்தான் மணப்பேன்னு சொன்னே, பிறகு நடக்கிறதே வேற. கையை காலை முறிச்சு மூலைல போட்டு, கடைசி வரை சுடு கஞ்சி ஊத்துவேன். மாமா குணம் உனக்குத் தெரியுமில்லை? ஜாக்கிரதை” என்று நயமாகவும், பயமாகவும் எப்படியெல்லாமோ சொல்லிப்பார்த்தேன். என் அண்ணாவும் சொல்லிப் பார்த்தார். அவன் கேட்க வில்லை. கடைசியில் அவன் தன் விருப்பப்படியே ஒரு பாஸ்டருடைய தங்கையை திருமணம் செய்து கொண்டான்.

## இயேசு கிறிஸ்து இவ்வளவு சீப்பானவரா? - கிறிஸ்தவர்கள் மேல் எனக்கிருந்த வெறுப்பு

*“இந்த மார்க்கத்தை நிந்தித்த போது ....” அப் 19 : 9*

கரூரில் நான் பெர்சனல் மேனேஜராக வேலை பார்த்த மில்லுக்கு மிகவும் அருகிலேயேதான் அவன் குடும்பத்துடன் குடியிருந்தான். இரண்டு குழந்தைகளையும் பெற்றுக் கொண்டான். ஆனால் நான் ஒரு முறை கூட அவன் வீட்டிற்கு சென்றதும் இல்லை, அந்த குழந்தைகளைத் தொட்டு தூக்கியதுமில்லை. என்னைப் பொறுத்தவரை அந்தத் திருமணத்தை நான் அங்கீகரிக்கவே இல்லை. என் அக்கா, அக்காவின் கணவர் மற்றும் என் உறவினர்கள் அனைவரும் அவன் வீட்டிற்குப் போய் வருவார்கள். என் அக்கா அழுது கண்ணீர் விட்டுக் கூட என்னை கூப்பிட்டுப் பார்த்தாள். ஆனால் நான் போகவே இல்லை. என் பிடிவாதம் அவர்களுக்குத் தெரியும். பஸ் ஸ்டாண்டிலும் ரயில்வே ஸ்டேஷன்களிலும் மற்றும் பல பொது இடங்களிலும் நின்று கொண்டு “பாவிகளே உங்களை இரட்சிக்க இயேசு கிறிஸ்து வந்துள்ளார்” எனக் கூக்குரலிட்டு ஒரு பிட் நோட்டீசைப் பலருக்கும் கொடுப்பதைப் பார்த்து “இவங்க யாருடா நம்மை பாவின்னு சொல்றதுக்கு? இவங்களுக்கு வேற வேலையில்லையா? இயேசு என்ன இவ்வளவு சீப்பானவரா? சோப்பு சீப்பு விக்கிறமாதிரி இப்படி கூவிக் கூவி விக்கிறாங்க” என்று கிறிஸ்தவர்கள் மேலும் அந்த மதத்தின் பேரிலும் எனக்கு சொல்லமுடியாத வெறுப்புதான் அதிகரித்தது. நான் வேலை பார்த்த மில்லில் எந்த கிறிஸ்தவனுக்குமே வேலை கொடுக்கக் கூடாது என்று எழுதாத ஒரு சட்டமே போட்டு அதை அப்படியே நிறைவேற்றவும் செய்தேன்.

## குங்குமப் பொட்டு பெர்சனல் ஆபீஸர் - எங்கள் குடும்பத்தின் தீவீர பக்தி

*“முன்னோர்களுடைய வேத பிரமாணத்தின்படியே... வைராக்கியமாயிருந்தேன்” - அப் 22 : 3*

விவேகானந்தரையும், இராமகிருஷ்ணபரமஹம்சரையும், திருமூலரையும், வள்ளலாரையும், இராமாயணத்தையும், மகா பாரதத்தையும், பகவத் கீதையையும் மற்றும் பல இந்து மத ஆன்மீக நூல்களையும் சிறுவயது முதலே நான் ஆழ்ந்து படித்து, கற்றுத் தேர்ந்து, இந்து மதம் ஒரு அர்த்தமுள்ள மதம் என தெளிவு பெற்று அதில் மிகுந்த ஈடுபாடும், பக்தியும் கொண்டிருந்தவன் நான். நான் மட்டுமல்ல என்னுடைய முழுக் குடும்பமுமே திருச்செந்தூர் முருகன் பேரிலும், மேல் மருவத்தூர் ஆதி பராசக்தியின் பேரிலும் மிகுந்த பக்தி உள்ளவர்களாக இருந்தோம். ஆண்டுக்கு இரு முறை விரதம் இருந்து, இருமுடி எடுத்து கோவிலுக்கு செல்வோம். அமாவாசை, பௌர்ணமி, சஷ்டி போன்ற விசேஷ நாட்களில் சிறப்புப் பூஜைகள் செய்து, ஏழை எளியவர்களுக்கு அன்னதானமும் செய்வோம். செவ்வாய், வெள்ளி மற்றும் விசேஷ நாட்களில் எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருமே செவ்வாடையில்தான் இருப்போம். கலச விளக்கு, வேள்வி பூஜைகளிலும், குடும்பநல வேள்விகளிலும் என் மனைவி தவறாமல் கலந்து கொண்டு முக்கிய பங்காற்றுவாள். எப்போதும் என் நெற்றியில் விபூதியும் குங்குமமும் பளீரெனத் துலங்கும். கரூர் ஏரியாவில் எனக்கு ‘குங்குமப் பொட்டு பெர்சனல் ஆபீசர்’ என்றே பெயர். என் குழந்தைகளுக்கு நான் வணங்கிய தெய்வங்களின் பெயர்களையே வைத்தேன். மூத்த மகனுக்கு திருச்செந்தூர் முருகனை நினைத்து கார்த்திகேயன் என பெயரிட்டேன். என் மகளுக்கு மந்திரங்களுக்கெல்லாம் தலையாய மந்திரமான காயத்ரி மந்திரத்தின் அம்சமாக, பிரணவ நாமத்தின் ஒலியாய் இருக்கும் பொருட்டு காயத்ரி என நாமம் சூட்டினேன். என் இளைய மகனுக்கு ஓம் சக்தியின் நினைவாக சக்தி என்றே பெயரிட்டு வாய் நிறைய, ஓயாமல் சக்தி, சக்தி என்றே அழைத்து வந்தோம். எங்களுடைய பக்தியையும், தானதர்மத்தையும், பூஜை புனஷ்காரங்களையும் பார்த்து, அக்கம் பக்கத்திலுள்ள அனைவருமே எங்கள் மீது அதிக அன்பும், மதிப்பும், மரியாதையும்

கொண்டிருந்தனர். எங்களின் மூத்த மகன் கார்த்தி 1999–ல் சாஃப்ட்வேர் இன்ஜினியராக சிங்கப்பூர் கம்பெனி ஒன்றுக்கு செலக்ட் ஆகிப் போன போது எங்களின் கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு விடிவு காலமும், எங்களின் பக்தியையும், தான தர்மத்தையும் ஏற்று, அந்த ஓம் சக்தி எங்களுக்கு அருளாசி வழங்கிவிட்டாள் என்றே பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைந்தோம். சிங்கப்பூரில் ஓர் ஆண்டு பணி புரிந்த பின் அமெரிக்காவில் உள்ள ஓர் கம்பெனிக்கு செலக்ட் ஆகி 24–6–2000 அன்று அட்லாண்ட்டாவிற்கு அவன் பிளேன் ஏறிச் சென்றபோது எங்கள் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. கண்ணீர் மல்க ஓம் சக்திக்கும் அனைத்து தெய்வங்களுக்கும் நன்றி கூறினோம்.

## பேரிடியாக வந்த செய்தி - எங்கள் வாழ்க்கையில் சோதனை

*"இந்த நாள் நெருக்கம் அனுபவிக்கிற நாள்" - ஏசாயா 37:3*

எங்களது மகிழ்ச்சி இரண்டரை மாதங்கள் கூட நீடிக்கவில்லை. செப்டம்பர் மாதம் 13ம் தேதி நள்ளிரவில் அமெரிக்காவில் உள்ள போர்ட்லேண்டு என்ற ஊரிலுள்ள செயிண்ட் வின்செண்ட் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த போன் கால் எங்களின் கனவுகளையும், மகிழ்ச்சியையும் உடைத்து சுக்கு நூறாக்கி விட்டது. உடனடியாக என் மகனின் தலையில் ஒரு மேஜர் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றும், அதை உடனடியாகச் செய்யவில்லை என்றால் அவன் உயிருக்கே ஆபத்து என்றும், ஆபரேஷனுக்கு என் சம்மதம் தேவை என்றும் கேட்டனர். என்ன ஆயிற்று என்று கேட்டேன். என் மகன் இன்டென்சிவ் கேர் யூனிட்டில் மிகவும் சீரியஸாக இருப்பதாகவும் அவனுடைய மூளையை மிலியரி T.B. நோய் தாக்கியிருப்பதாகவும் மூளையின் கீழ் பகுதியான வென்ட்ரிகுலர் ஸ்பேஸ் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உடனடியாக அதில் ஒரு ஷண்ட் அதாவது டியூப் போடவேண்டும் என்றும் கூறினர். பேரிடியாக வந்த இந்த செய்தியை எங்களால் தாங்கவே முடியவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்பு துள்ளித்திரியும் இளங்காளையாக எல்லா விதமான நம்பிக்கைகளோடும் கனவுகளோடும் லட்சியங்களோடும் சென்ற எங்கள் மகனுக்கா இந்த கதி? எங்களால் நம்பவே முடிய வில்லை. ஒரு வேளை இது ராங் காலாக இருக்குமோ ......யார் பெற்ற பிள்ளைக்கு பாவம் இப்படி ஒரு நிலையோ என பரிதவித்து திரும்பத் திரும்பக் கேட்டோம். எங்கள் மகனுக்குத்தான் எனத் தெளிவாகக் கூறிவிட்டனர். என் மனைவி, மகள் அனைவரும் கதறி அழுது புலம்பினர். ஏன் இந்தக் கொடுமை? நாங்கள் யாருக்கு என்ன கெடுதல் செய்தோம்? ஒரு பாவமும் அறியோமே ..நமக்கு ஏன் இந்த நிலை? நம் மகனுக்கு ஏன் இந்த வேதனை? கண் திருஷ்டியா? மற்றவர்களின் வயிற்றெரிச்சலா? பொறாமையா? செய்வினையா? விதியா? கர்ம வினையா? ஐயோ யாரிடம் போய் கேட்க? 58 வருடங்களாக நான் கையெடுத்துக் கும்பிட்ட தெய்வங்கள் ஏன் என் மகனைக் காக்கவில்லை?

## எல்லா தெய்வப் படங்களையும் உடைத்து எறிந்தேன்-வழிபட்டு வந்த தெய்வங்களின் மீது வெறுப்பு

*"விக்கிரங்களை நொறுக்கி தூளாக்கி ..." II நாளா 34 :7*

நான் இதுகாறும் செய்த பூஜைகளுக்கும் விரதங்களுக்கும் தான தர்மங்களுக்கும் ஒரு அர்த்தமே இல்லையா? இந்த தெய்வங்கள் நினைத்திருந்தால் என் மகனின் நிலையை மாற்றி இருக்க முடியாதா? தவிர்த்து இருக்க முடியாதா? இல்லையேல் இவற்றை தடுக்கும் சக்தி இவைகளுக்கு கிடையாதா? அலைமோதி ஆர்ப்பரிக்கும் ஆயிரம் கேள்விகளுடன் கார்த்தியின் ஜாதகத்தை தூக்கிக் கொண்டு ஜோசியரிடமும் கை ரேகை பார்ப்பவனிடமும் ஓடினோம். கிரகங்கள் சரியில்லை. ராகு திசையில் சனிபுத்தி, அதுவும் அஷ்டமத்து சனி. இப்படித்தான் பாடாய்ப் படுத்தும். பரிகாரம் பண்ணுங்கள், தோஷம் விலகும். சனீஸ்வர பகவானுக்கு ஒரு மண்டலம் தினமும் எள் விளக்கு ஏற்றி அர்ச்சனை செய்யுங்கள் என்று ஒரு சிலர். நவக்கிரஹ பூஜை பண்ணுங்கள் என்று வேறு சிலர். கணபதி ஹோமம் பண்ணுங்கள் விக்கினங்கள் விலகும் என்று மேலும் சிலர். சிவனுக்கு தினமும் பாலாபிஷேகம் செய்யுங்கள் என்று ஒரு சிவபக்தர். ஆஞ்சநேயருக்கு வடை மாலையும் வெண்ணெய்க் காப்பும் சாற்றுங்கள் என்று ஒரு அனுமன் பக்தர். இப்படி பற்பல போதனைகள். என் மனைவி அனைத்தையும் ஓடி ஓடி ஒவ்வொன்றாக கண்ணீர் மல்க செய்தாள். பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைப் பாசம். ஏதாவது ஒன்றுக்காவது இறைவனின் மனம் இரங்கி தன் மகன் பிழைத்து விட மாட்டானா என்ற ஒரு தாயின் பரிதவிப்பு. எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற பித்துப் பிடித்த நிலை. எதையும் குறைவு படாமல் அனைத்தையும் செய்தாள். ஒரு சிலர் இது விதி, கர்ம வினை, சஞ்சித கர்மாவையும், பிராரார்த்த கர்மாவையும் யாராலும் மாற்ற முடியாது. அனுபவித்துத்தான் ஆக வேண்டும். நம்மைப் படைத்த ஆண்டவனும் அதை மாற்ற மாட்டான் என்றனர். எல்லாமே விதிப்படியும், கர்மவினைப்படியும்தான் நடக்கும் என்றால் பிறகு ஏன் இந்தக் கடவுள்களை நாம் கும்பிடவேண்டும்? கும்பிட்டு என்ன பிரயோஜனம்? நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோமா? அப்படித்தான் இவ்வளவு காலமும் வாழ்ந்தோமா? எனக்கு எல்லாமே வெறுத்துவிட்டது. வாழ்க்கையே அர்த்தமற்று ஒரே சூன்யமாகத் தோன்றியது. என் வீட்டிலிருந்த எல்லா தெய்வப்படங்களையும் எடுத்து உடைத்து எறிந்தேன். உடம்பு என்று இருந்தால் அதில் சில வியாதிகள் வருவதுதான். ஒரு தலைவலி, ஒரு ஜலதோஷம், காய்ச்சல், டைபாய்டு, மலேரியா இவைகள் நார்மல். ஆனால் மூளை பாதிக்கப்பட்டு, பேரலைஸ் ஆகி மேஜர் ஆபரேஷன் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அதைத் தடுக்க வேண்டியது நாம் இதுவரை கும்பிட்ட, நம்பியிருக்கும் தெய்வங்களின் கடமையல்லவா? அதைச் செய்யவில்லை என்றால் அவைகள் இருந்தாலும் ஒன்றுதான். இல்லையென்றாலும் ஒன்றுதானே என்பது போன்ற சிந்தனைகளை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

## 18 ஆப்ரேஷன்கள் - அமெரிக்க டாக்டர்களுக்கே ஒரு சவால்

*"இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும்;*
*மனுஷனுடைய உதவி விருதா" - சங் 108 :12*

என் மகனைப் பார்க்கவும், அவனுடைய கஷ்டகாலத்தில் அவனுடன் இருக்கவும் நான் 27.9.2000 அன்று அமெரிக்கா பயணம் ஆனேன். அங்கு ICU வார்டில் என் மகன் இருந்த நிலை கண்டு துடிதுடித்துப் போய்விட்டேன். முற்றிலும் சுய நினைவு இழந்த நிலையில், இடது பக்கம் பக்க வாதம் வந்து உடலையே அசைக்க முடியாத நிலையில், பேசவும் முடியாமல் உடம்பெல்லாம் குழாய்கள்

பொருத்தப்பட்டு, கிழிந்த நாராக அவன் படுக்கையில் கிடந்த அந்த கோரக் காட்சியைக் கண்டு என் உயிரே உருகிவிட்டது. இதுபோன்று தான் பெற்ற மகனையே காணும் ஒரு அவலம் வேறு எந்த ஒரு பெற்றோருக்கும் வரக்கூடாது. மூளையின் கீழ் பகுதியில் அதிகமாக சுரக்கும் திரவத்தை வெளியேற்ற ஒரு டியூப்பை ஆபரேஷன் செய்து தலைக்குள் செலுத்தி இருந்தனர். டியூப்பில் அடைப்பு ஏற்பட்டு திரவம் வெளியேறாததால் மூன்று முறை தலையில் மேஜர் ஆபரேஷன் செய்யும்படி ஆயிற்று. பயாப்சி, கல்ச்சர், டிரெக்கியாஸ்டமி என்று பல காரணங்களுக்காக 18 முறை அவன் ஆப்ரேஷன் தியேட்டருக்கு எடுத்துச் செல்லப்பட்டான். இருந்தும் கார்த்தியின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போனதே ஒழிய, எந்த வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. என் மகனுடைய நிலை உலகப் பிரசித்தி பெற்ற அந்த அமெரிக்க டாக்டர்களுக்கே ஒரு சவாலாக இருந்தது. அவர்களும் என்னவெல்லாமோ சிகிச்சைகள் கொடுத்தும், வேர்ல்டு ஹெல்த் ஆர்கனிசேஷன் வரை கன்சல்டேஷன் செய்தும் என் மகனின் நிலை மிகவும் அபாயகரமான நிலைக்கே சென்று கொண்டிருந்தது.

## மீண்டும் பயபக்தி - ஆரம்ப வாழ்வுக்கு திரும்புதல்

*“...அவர்கள் திரும்பி அந்நிய தேவர்களைப் பின்பற்றவும், சேவிக்கவும் ... வழியையும் விடாதிருப்பார்கள்” - நியாயா 2:19*

என் மகனின் அந்த நம்பிக்கை அற்ற நிலையைக் கண்டு நான் என்ன செய்வது என்றே தெரியவில்லை. நான் உடைத்து எறிந்து உதறிவிட்ட தெய்வங்களையே மீண்டும் கும்பிடுவதைத்தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை. எல்லாத் தெய்வங்களிடமும் நான் அறியாமல் சிறுபிள்ளைத்தனமாக தவறு செய்துவிட்டேன். என்னை மன்னித்து என் மகனை எப்படியாவது காப்பாற்றுங்கள் என்று கதறி அழுதேன். மடைதிறந்த வெள்ளமென வரும் கண்ணீரோடு கந்த சஷ்டி கவசம் சொல்வேன். ஓம் சக்தியே போற்றி ஓம்.. ஓங்கார ஆனந்தியே போற்றி ஓம் என்று 108 ஓம் சக்தி மந்திரம் சொல்வேன். போர்ட்லேண்டில் ஒரு நாராயண் மந்திர் இருப்பதை கேள்விப்பட்டு, அங்கு சென்று கண்ணீரோடும் கலக்கத்தோடும் பிராத்தனை செய்தேன். அங்கு மிருத்துஞ்ஜெய மந்திரம் அதாவது உயிர்கொடுக்கும் மந்திரத்தை எனக்கு சொல்லிக் கொடுத்து, அதை 108 தடவை சொல்லும் படி கூறினர். அதைச் சொல்லுவேன். வேதாத்ரி மஹரிஷியின் வாழ்க வளமுடன் மந்திரத்தை உச்சாடனம் செய்வேன். ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையிலும் அங்கு ரவி என்பவரின் வீட்டில் சத்யசாயி பாபாவின் சாயி பஜன் நடைபெற்று வந்தது. அங்கும் சென்று அதில் கலந்து கொண்டு கண்ணீரோடு பாபாவின் அருளை வேண்டி பஜனை செய்வேன். அங்கு ஷிர்டி சாய் பாபாவின் வாழ்க்கை சரிதத்தையும், அவர் செய்த அற்புதங்கள் அடங்கிய புத்தகத்தையும் ஒரு வேண்டுதலோடு ஒரு வாரத்திற்குள் பக்தியோடு படித்து முடித்தால் நாம் வேண்டியது நடக்கும் என்று கூறினர். அந்தப் புத்தகத்தையும் நான் படித்து முடித்து, பக்தி சிரத்தையோடு பாபாவிடம் தினமும் வேண்டுவேன். பாபாவின் ஒரு சிறிய போட்டோவை கார்த்தி இருந்த ICU வார்டியிலேயே ஒட்டி வைத்தேன். புட்டப்பர்த்தியில் பாபா தன் கையால் வரவழைத்துக் கொடுத்த விபூதியையும் கொடுத்தனர். அதை கார்த்தியின் நெற்றியில் தினமும் பயபக்தியோடு பூசுவேன். காலையில் இருந்து இரவு வரை என் உதடுகள் ஏதாவது ஒரு மந்திரத்தை உச்சாடனம் செய்து கொண்டே இருந்தது. ஆனால் கார்த்தியின் நிலையோ நாளுக்கு நாள் மோசமான நிலையில் இருந்து மிக மோசமான நிலைக்கே போய்க் கொண்டிருந்தது. He was sinking. என் பிராத்தனையைக் கேட்டு, என் கண்ணீரைப் பார்த்து, என் மகனின் நிலையை, விதியை மாற்ற வல்ல தெய்வம் இந்த உலகில் எதுவுமே இல்லையா என கதறி அழுதேன். விதியையும் கர்ம வினையையும் மாற்றவல்ல கடவுள் என் கதறலையும் கண்ணீரையும் பார்த்துவிட்டார்போலும். என் வேண்டுதலுக்கு நவம்பர் 2ம் தேதி பதில் கிடைத்தது.

## விதியையும் மாற்ற வல்ல இயேசு

*“வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” - மத் 11 : 28*

நவம்பர் மாதம் 2ம் தேதி மிகுந்த விரக்தியோடும், உடைந்து நொறுங்குண்ட இருதயத்தோடும் நான் ஆஸ்பத்ரியின் ICU ரிசப்ஷனில் உட்கார்ந்து இருந்த போது என்னைக் கடந்து சென்ற ஒருவர் திரும்பிப் பார்த்து, என்னிடம் வந்து “ஆர் யூ பிரம் இண்டியா?” என்றார். எஸ் என்றேன். எந்த ஊர் என்றார். மெட்ராஸ் என்றேன். அவர் பெயர் பாஸ்டர் ஜேக்கப் ஜார்ஜ் என்றும், கேரள மாநிலத்தை சேர்ந்தவர் என்றும் கூறினார். பின்பு யார் இங்கு இருக்கிறார்கள் எனக் கேட்டார். நான் கார்த்தியின் நிலை பற்றி கூறினேன். மிகவும் அக்கறையோடு கேட்டபின்பு உங்கள் மகனுக்காக நான் ஜெபம் பண்ணட்டுமா என மிகவும் உருக்கமாகக் கேட்டார். Please, Go ahead and pray என்றேன். அவர் ஜெபம் பண்ணினார். மிகவும் உருக்கமான பிரேயர். உள்ளத்தைத் தொடும் பிரேயர். இறைவனிடத்தில் மன்றாடி, கண்ணீர் விட்டுக் கதறி, கெஞ்சிய ஒரு ஸ்டிராங் அண்டு எபெக்டிவ் பிரேயர். பெரிய புராணத்தில் சேக்கிழார்இறைவனின் கால்களை சிக்கெனப் பிடித்தேன் என்று பாடியுள்ளார். அது போல இறைவனின் கால்களை சிக்கென பிடித்துக் கதறி கெஞ்சியது போல இருந்தது அவருடைய பிரேயர். டோட்டலாக சரண்டர் ஆகி, நீரே கதி என்ற முழு சரணாகதி உணர்வுடன் கூடிய ஒரு ஜெபம் அது.

## ஜெபத்தால் ஏற்பட்ட அதிசய மாற்றங்கள்

*“நீதி மான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக் காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்” - சங் 37 : 39*

ஒரு தகப்பன் என்ற முறையில் என் மகனுக்காக நான் அழுது பிரார்த்திப்பது அதிசயமில்லை. ஆனால் முன்பின் தெரியாத ஒருவர் என் மகனுக்காக அழுது புலம்பி இப்படி ஜெபித்தது என் உள்ளத்தை தொட்டது மாத்திரமல்ல, ஆச்சரியமாகவும் இருந்தது. ஏனென்றால் நான் மட்டும் அல்ல. இந்துக்களில் அனேகம் பேர் தங்களுக்காகத்தான் வேண்டிக்கொள்வர். அடுத்தவர்களுக்காக வேண்டுதல் பண்ணும் பழக்கம் கிடையாது. பிரேயரிலும் நாங்கள் சுயநலம்தான். தான் நல்லா இருக்கணும் தன் குடும்பம் நல்லா இருக்கணும் என்று மட்டும்தான் வேண்டுவோம். ஓம் சக்தி மன்றத்தில் யாரேனும் கேட்டுக் கொண்டால் அவர்கள் வீடுகளுக்கு சென்று குடும்ப நல பூஜையோ அல்லது வேள்வியோ பண்ணுவதுண்டு. மற்றப்படி எதிர்வீட்டுக்காரர், பின் வீடு, அடுத்தவீட்டுக்காரர், நம்

எதிரிகள், நண்பர்கள், உறவினர்கள், முன்பின் தெரியாத வியாதியஸ்தர்களுக்காக இறைவனிடம் வேண்டுவது கிடையாது. அதற்கு எவ்வளவு பெரிய அன்பான உள்ளம் வேண்டும்? மேலும் வாய்விட்டு சத்தமாக ஜெபிக்கும் பழக்கமும் கிடையாது. எல்லாமே மனசுக்குள்தான். அந்த பாஸ்டரின் ஜெபத்தைக் கேட்டு நான் தாரை தாரையாக கண்ணீர் விட்டு சிறு குழந்தையைப் போல ஓவென்று அழுதேன். அழுத பின்பு என் மன பாரமும் அழுத்தமும் குறைந்து லேசாக ஆனது. உங்களுக்காகவும், உங்கள் மகனுக்காகவும் ஜெபிக்க எனக்குத் தெரிந்த இந்தியர்கள் இங்கு உள்ளனர். உங்களுக்கு சரி என்றால் அவர்களையும் அழைத்து வருகிறேன். தொடர்ந்து அவர்கள் உங்களுக்காக ஜெபிப்பார்கள். ஆண்டவரின் ஆசீர்வாதமும் கிருபையும் கண்டிப்பாக உங்கள் மகனைக் காப்பாற்றும் என்று ஆறுதல் வார்த்தை கூறினார். பிளீஸ், கண்டிப்பாக அழைத்து வாருங்கள். I need all the prayers for my son என்றேன். அவர் சென்று வர்கீஸ் அங்கிள், ஆண்ட்டி, சாம், மிஸஸ் சாம், ஜார்ஜ் ஜாய் மற்றும் சிலருடன் வந்தார். ICU ரிசப்ஷனிலேயே இருந்த ஒரு ரூமில் என் மகனுக்காக ஒரு மணி நேரம் அவர்களனைவரும் அழுது, கண்ணீர் விட்டு மிகவும் அக்கறையோடும் ஆதங்கத்தோடும் பாரத்தோடும் ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர் இது வரை மிக மோசமாக போய்க் கொண்டிருந்த கார்த்தியின் நிலையை மாற்றி, ஒரு முன்னேற்றமான மாற்றத்தைக் கொண்டு வந்தார். எனக்கு ஒரே ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. இறைவனுக்கு கோடானு கோடி நன்றி கூறினேன். முதல் முறையாக மூன்று மாதங்களுக்குப் பிறகு கார்த்தியின் கண்களில் உயிரோட்டத்தையும் ஒரு ஒளியையும், என்னை அறிந்து கொண்ட ஒரு புரிதலையும் ஒரு தெளிவையும் அவன் முகத்தில் கண்டேன். அம்மா எங்கே என்று சைகையால் கேட்டான். அவன் அமெரிக்காவில் இருப்பதைக் கூட மறந்து விட்டான்.

## வாதம், விவாதம், விதண்டாவாதம்

*"எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று ... ஏகமாய் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்" - அப் 19 : 34*

அதன் பின் தினமும் பாஸ்டர் ஜேக்கப்பும், மற்றும் சிலரும் வந்து என்னோடு பல மணி நேரம் செலவழிப்பார்கள். என்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமல், எனக்காக எந்த உதவியையும் செய்யத் தயாராக இருந்தனர். ஆனால் அவர்கள் எப்போதும் பைபிளையும், இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் பேசுவதைப் பார்த்து கொஞ்சம் எச்சரிக்கை ஆனேன். ஆஹா இவர்கள் நம்மை மதமாற்றம் செய்ய முயற்சி பண்ணுகிறார்கள் . Let us be cautious என்று பிறகு நான் ரெசிஸ்ட் பண்ண ஆரம்பித்து விட்டேன். அவர்கள் சொல்லும் ஒவ்வொன்றுக்கும் இது கீதையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இது இராமாயணத்தில் உள்ளது. இது மஹாபாரதத்தில் இருக்கிறது. இதையே விவேகானந்தர் இப்படி கூறியிருக்கிறார். இதை விடச் சிறப்பாக இராமலிங்க சுவாமிகள் கூறியிருக்கிறார் என மேற்கோள் காட்டி முதலில் வாதம் செய்தேன். பின் விவாதம் செய்தேன். பிறகு விதண்டா வாதமும் செய்தேன். ஆனால் அவர்களோ திருப்பி எவ்வித ஆர்கியூமெண்ட்டோ அல்லது கவுண்ட்டர் ஆர்கியூமெண்ட்டோ பண்ண வில்லை. இந்து மதத்தையோ அல்லது இந்து மத தெய்வங்களைப் பற்றியோ, சடங்கு சம்பிரதாயங்களைப் பற்றியோ ஒரு வார்த்தை கூட குறை கூறிப் பேசவில்லை. அவர்கள் சொன்னதெல்லாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவர் எப்படி மனித குலத்தின் பாவங்களுக்காக மரித்து, பின் உயிர்த்தெழுந்து, இன்றும் உயிரோடு இருக்கிறார் என்றும், அவரின் அன்பு, கிருபை, செய்த அற்புதங்கள், அவர் நமக்கு கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களைப் பற்றி மட்டுமே கூறினர். மேலும் அவர்களின் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்கள் பற்றியும், அதற்கு அவர்கள் ஓர் உயிருள்ள சாட்சியாக இருப்பதையும் எடுத்துக் கூறினர். இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள், அவர் கண்டிப்பாக கார்த்தியைக் காப்பாற்றுவார் என்று அறுதியிட்டு உறுதியாக கூறினர். அதற்கு அச்சாரமாக கார்த்தியின் நிலையில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் நான் பார்த்தேன். எனக்கு நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. இவை அனைத்துமே எனக்கு மிகவும் ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் இருந்தது.

## 11 வது இடத்திலிருந்து ஒன்றாவது இடத்திற்கு வந்த இயேசு

*"...உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்" - அப் 4 : 11*

ஒரு பக்கம் நான் 58 ஆண்டுகளாக மனதார கும்பிட்டு வழிபட்டு வந்த தெய்வங்கள் அனைத்தும் என்னை கைவிட்ட நிலை. மற்றொரு பக்கம் சில நாட்கள் ஜெபத்திலேயே கார்த்தியின் நிலையில் முன்னேற்றத்தைக் கொடுத்த, நான் இது நாள் வரை வெறுத்து ஒதுக்கி வந்த இயேசு. இதையும் நான் அவர்களிடமே கேட்டேன். நான் இது வரை இயேசுவை எதிர்ப்பவனாகவே இருந்து வந்துள்ளேன். அப்படியிருக்க எப்படி இயேசு எனக்கு மனமிரங்கி அருள் புரிவார் என்று கேட்டேன். இயேசுவை சிலுவையில் அறைந்து சித்திரவதை செய்த போதும் அவர் அவர்களை மன்னித்து அவர்களுக்காக பிதாவிடமும் மன்னித்து விடும்படி கேட்டார். அப்பேற்பட்ட தாய் உள்ளம் கொண்டவர் இயேசு பிரான். நம் அனைவரின் பாவங்களையும் ஏற்று அதற்காக தன்னையே பலி கொடுத்து நம் அனைவருக்கும் பாவ விமோசனம் அருளியவர் அந்த அருள் நாதர். அவரை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு, மண்டியிட்டு, செய்த பாவங்களை அவரிடம் அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பு கேளுங்கள். உங்களையும், கார்த்தியையும் கண்டிப்பாக ஆசீர்வதிப்பார். இயேசு கிறிஸ்து பக்தியுள்ளவனை தமக்காக தெரிந்து கொண்டார் என்று வேதம் சொல்கிறது. அப்படித்தான் இயேசு உங்களையும் தெரிந்து கொண்டு உங்களை இரட்சிக்க விரும்புகின்றார் என்றனர். எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலை எனக்கு. மேலும் நாம் இது வரை ஒரு தெய்வத்தையா கும்பிட்டுக் கொண்டிருந்தோம்? சிவனையும், ஓம்சக்தியையும், வினாயகரையும், முருகனையும் வெங்கடாசலபதியையும், ஆஞ்சநேயரையும், பங்காரு அடிகளாரையும், சாய் பாபாவையும் ஒரு சேரக் கும்பிடவில்லையா? கல்லைக் கண்ட இடமெல்லாம் கடவுளாக எண்ணி கையெடுத்துக் கும்பிட்டு பாலாபிஷேகம் செய்து, வஸ்திரம் சாத்தி, பூமாலையிட்டு, பொங்கலிட்டு, தேங்காய் பழம் என்று படையலிட்டு நெடுஞ்சாண்கிடையாக விழவில்லையா? மேலும் இந்து மதம் சொல்வது என்ன? நதிகள் தான் பல. அவைகள் போய்ச் சேருமிடம் ஒன்றுதான். ஈஸ்வர் அல்லா தேரே நாம், சப்கோ சன்னத் ஹே பகவான் என்று தானே நமக்கு கற்றுக் கொடுத்துள்ளனர்? அப்படியிருக்கும் போது ஏன் பத்தோடு பதினொன்றாக இயேசுவையும் சேர்த்து கும்பிடக்கூடாது? மேலும் என்னை கிறிஸ்தவனாக மாற்றுவதனால் இவர்களுக்கு என்ன நன்மை? நல்ல அரிசியோ, துணிமணியோ, பொருளையோ நாம் வாங்கினால் அதை எங்கு, எந்தக் கடையில் வாங்கினோம் என்று அடுத்தவர்களுக்கு சொல்வது இல்லையா? அது போல இயேசுவிடம் இவர்கள் பெற்ற ஆசீர்வாதத்தை,

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று அடுத்தவர்களுக்கும் சொல்கிறார்களோ? எது எப்படியோ இயேசுவையும் சேர்த்து வைத்து கும்பிடுவதினால் என் மகனுக்கு நன்மை கிடைக்குமென்றால் அதில் என்ன தவறு? இயேசுவைக் கும்பிட்டால் ஓம்சக்தியும், முருகனும் கோபித்துக் கொள்வார்களோ? மனிதர்களுக்குள் தான் அந்த பொறாமையும், சுய நலமும், அந்த பொசசிவ்நெஸ்சும் இருக்கும்! தெய்வங்களுக்குள்ளுமா? No..it can never be so. நான் எல்லா இந்து தெய்வங்களையும் கும்பிட்டு அதற்குரிய மந்திரங்களையும் கூறிவிட்டு கடைசியாக இயேசுவையும் கும்பிட ஆரம்பித்தேன். நாளாக நாளாக இயேசு 11வது இடத்திலிருந்து 9வது இடத்திற்கும், பின் 7,5,3,2 என்று ஒரு மாதத்திற்குள் ஒன்றாவது இடத்திற்கு வந்து விட்டார். கார்த்தியின் உடல் நிலையும் தேறி ICU விலிருந்து ஜெனரல் வார்டுக்கு மாறுதலாகி, பிறகு ரீஹாபிலிடேஷன் சென்ட்டருக்கும் மாற்றப்பட்டான்.

## இயேசுவிற்கு நான் கொடுத்த காலக்கெடு

*“என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது...” - சங் 31:15*

ஒரு மாதத்திற்குள் அதாவது 2001 ஜனவரி 15ம் தேதிக்குள் கார்த்தியை பரிபூரணமாக குணமாக்கினால் நான் இயேசு கிறிஸ்துவை என் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன் என்று பாஸ்டர் ஜேக்கப் ஜார்ஜிடம் கூறினேன். அதற்கு அவர் நீங்கள் மற்ற வேறு எந்த தெய்வங்களையும் கும்பிடாமல், இயேசுவை மட்டும் கும்பிட்டு வாருங்கள் என்று கூறினார். அன்று முதல் இயேசுவை மட்டும் நினைத்து, ஆராதித்து, 24 மணி நேரமும் ஜெபம் பண்ண ஆரம்பித்தேன். நான் எதைச் செய்தாலும் அதை இயேசுவிடம் முறையிட்டு அவரின் ஆசியை வேண்டிய பிறகே செய்தேன். பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை நான் உணர ஆரம்பித்தேன். பிறகு மனதால் கூட தவறு செய்ய அஞ்சும் ஒரு பரிசுத்த நிலைக்கு படிப்படியாக உயர்ந்தேன். இந்த சமயத்தில் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. சனிக்கிழமைதோறும் நான் என் குடும்பத்துடன் பேச ISD தொடர்பு சுலபத்தில் கிடைக்காது. அதிக நேரம் முயற்சி செய்த பிறகே கிடைக்கும். இயேசுவிடம் வேண்டுவேன். உடனே கிடைக்கும். போன் பிரிபெய்டு கார்டு தொலைந்து போய் திரும்பக் கிடைத்தல், அவசர நேரங்களில் காரில் லிப்டு, குக்கரின் மூடியை நான் 15 நிமிடம் போராடியும் திறக்கமுடியாமல், இயேசுவிடம் வேண்டியவுடன் அது திறந்தது, இப்படி ஒன்றா இரண்டா? சொல்லி மாளாத அளவுக்கு இயேசுவிடம் நான் எந்த ஒரு சின்ன வேண்டுதலை வைத்தாலும் அதை உடனே நிறைவேற்றித் தந்தார். அவைகள் எல்லாவற்றையும் நான் கூறுவதென்றால் அதற்கு பல நாட்கள் ஆகும். இவை அனைத்திற்கும் மேலாக எந்த ஒரு நம்பிக்கையும் இல்லாமல் இதுவரை கலங்கித் தவித்த எனக்கு கர்த்தர் ஒரு நம்பிக்கையையும், சமாதானத்தையும் தந்து ஆசீர்வதித்தார்.

அதே சமயத்தில் கர்த்தருக்கு ஒரு காலக்கெடு கொடுத்து ஒரு மாதத்திற்குள் என் மகன் குணமடைய வேண்டும் என்று கூறுவதற்கு நாம் யார்? அவர் என்ன நாம் வைத்த ஆளா? மேலும் எதை எப்போது செய்ய வேண்டும், எது நமக்கு நன்மை தரும் என்று அவருக்குத் தெரியாதா? கர்த்தர் நம் விண்ணப்பத்தைக் கேட்டு அவரின் சித்தப்படி, அவர் குறித்துள்ள நேரம், காலத்தில்தான் எதையும் நடக்கச் செய்வார் என்ற ஞானமும் தெளிவும் எனக்கு வந்தது. அதன்பின் ஆண்டவர் பல அற்புதங்களை அடுத்து அடுத்து செய்தார்.

## கர்த்தர் செய்த அற்புதம் - விசுவாசத்தில் பலப்பட்டேன்

*“என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு” - பிலி 4:13*

ரீஹாபிலிடேஷன் சென்ட்டரில் ஒரு நாள் அதிகாலையில் கார்த்திக்கு யூரின் போவதற்காக நான்கு மாதங்களுக்கு முன்பு போட்டிருந்த டியூப்பை எடுத்து விட்டனர். ஆனால் அன்று மாலை வரை, அதுவும் அந்த டிசம்பர் குளிரில் அவன் யூரினே இருக்க வில்லை. எங்கோ உள்ளே அது பிளாக் ஆகி வலியினால் துடிதுடிக்க ஆரம்பித்துவிட்டான். நர்ஸ்– இது கொஞ்சம் சீரியஸான விஷயம், 4 மாதங்களாய் டியூப் போட்டு இருந்ததால் யூரினரி டிராக்கில் இன்பெக்ஷன் ஆகியிருக்கலாம். டாக்டரைக் கூப்பிடுகிறேன் என கூறினாள். நான் தான் பீளிஸ் வெயிட்; நீ உன்னுடைய டாக்டரை கூப்பிடுவதற்கு முன்பாக நான் என்னுடைய டாக்டரை கூப்பிடுகிறேன் என்று கூறி, சாம், வர்கிஸ் அங்கிள் அவர்களுக்கு போன் செய்து விஷயத்தை கூறினேன். அவர்கள் டோன்ட் வொரி; நாங்கள் அனைவரும் இப்போதே ஜெபம் பண்ணுகிறோம். நீயும் கார்த்தியின் மீது கை வைத்து ஜெபம் பண்ணு. கர்த்தர் கருணை புரிவார் என்றனர். அவர்கள் சொன்னபடியே நானும் கை வைத்து ஜெபம் பண்ணினேன்.

அடுத்த வினாடியே தடைகளை அகற்றி, கட்டுகளை நீக்கி கார்த்திக்கு அற்புத சுகம் தந்தார். இது போன்று பல முறை எவ்வித காரணமும் இன்றி கார்த்தியின் உடல் நிலை திடீர் திடீர் என்று மோசமாகும். அதற்கென்று எந்த மருந்துகளும் கொடுக்காமல், ஜெபத்தினால் மட்டுமே கார்த்தி மீண்டும் நல்லபடியாக ஆவான். மெய்யான தேவனாகிய கர்த்தரிடம் நான் முழுமையாகச் சென்று விடாமல் இருக்க இது போன்று பல தொல்லைகளையும் இடையூறுகளையும் சாத்தான் தொடர்ந்து கொடுத்தான். ஆனால் என்னுடைய விசுவாசத்தில் நான் மிகவும் உறுதியாக இருந்தேன். தொல்லைகளும் இடையூறுகளும் தானாகவே மாயமாய் மறைந்தன. நான் கிறிஸ்துவ விசுவாசத்தில் பலப்பட்டதற்கு அஸ்திவாரம் போட்டவர்கள் என் வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத பாஸ்டர் ஜேக்கப் ஜார்ஜ், சாம், வர்கிஸ் அங்கிள், ஜார்ஜ் ஜாய், அவரின் மனைவி சுதா, பால், ஜான்சன் மற்றும் அவர்களின் நண்பர்கள். அவர்களுடைய தொடர்ந்த ஜெபம், ஈடுபாடு, தொடர்பு, அன்பு, உதவி, மாரல் சப்போர்ட், பெல்லோஷிப் இவைகளே விசுவாசத்திலும் கிறிஸ்துவுக்குள்ளும் என்னை பலப்படுத்தி எப்பாடுகள் வந்தாலும் என்னை உறுதியாக நிற்க வைத்தது. அவர்கள் காட்டிய அன்புக்கும் அக்கறைக்கும் ஈடு இணையே இல்லை. அவர்கள் அனைவரும் எங்களுக்காக எந்த உதவியையும் செய்யத் தயாராக இருந்தனர். தன்னலமற்ற, பிறர் துன்பத்தையும் தன் துன்பமாக ஏற்று பகிர்ந்து கொள்ளும் அந்த உண்மையான கிறிஸ்துவின் அன்பே இயேசுவை எதிர்ப்பவனாக இருந்த என்னை இறுதியாக வென்று கிறிஸ்துவுக்குள்ளும் கொண்டு வந்தது. இயேசு கிறிஸ்துவின் தூய்மையான அன்பை, இயேசுவின் சாயலை அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் கண்டேன். அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள். பைபிளில் ஒருவர் எப்படி வாழ வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறதோ, அதன்படி அவர்கள் வாழ்ந்து வந்ததை என்னால் காண முடிந்தது.

## வெறுத்த கிறிஸ்துவம் எப்படி விருப்பமானது?

*"... தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" - பிலி 2:13*

இயேசு கிறிஸ்துவையும், கிறிஸ்தவ மதத்தையும் அடியோடு வெறுத்த நான் எப்படி, எதனால், எதைக் கண்டு இயேசுவையும், கிறிஸ்துவத்தையும் ஏற்றுக் கொண்டேன் என்று ஒரு சமயம் நான் என்னையே கேள்வி கேட்டு ஆராய்ந்து பார்த்தேன். கார்த்தி இந்த நிலைக்கு ஆவதுவரையும், அதன் பின்பு இத்தனை நாட்களும் அவனைக் காப்பாற்றாமல் இப்படி நிர்கதியாக விட்டு விட்டார்களே என்று எனக்கு ஓம் சக்தியின் பேரிலும், முருகன் பேரிலும் மற்றும் நான் கும்பிட்ட இதர தெய்வங்கள் பேரிலும் எனக்கு கோபம் இருந்தது உண்மை. ஆனால் இந்த கோபம் மட்டுமே இயேசு பேரில் ஏற்கனவே எனக்கு இருந்த வெறுப்பை மாற்றி அன்பு கொள்ளச் செய்துவிடாது. ஏனென்றால் இந்து மதமும், அதன் சம்பிரதாயங்களும், சடங்குகளும் 58 ஆண்டுகளாக என் இரத்தத்தில் ஊறியவை. இந்துக் குடும்பத்தில் பிறந்த ஒரே காரணத்திற்காக நான் இந்து மதத்தில் கடனே என்று இருக்க வில்லை. உண்மையிலேயே இந்து மதத்தை நான் நேசித்தேன். அதில் இருப்பதற்காக மிகவும் பெருமையும் பட்டேன். நான் உள்ளம் உருக முருகன் பேரிலும், அம்பாள் பேரிலும் பக்திப் பாடல்களை பாடுவேன். பல கோவில்களிலும் பாடியுள்ளேன். பக்தி பாடல்களாக ஒரு கச்சேரியே செய்து அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு ஒரு ஏழை பிராமண பெண்ணுக்கு திருமணமும் செய்து வைத்தவன். முருகனைப் பற்றி 100 தடவைகளுக்கு மேல் கதா காலட்சேபம் செய்தவன். குண்டலினியை மூலாதாரத்திலிருந்து சகஸ்ராரத்திற்கு ஏற்றி அங்கு தியானம் பழகியவன். முக்கண் திறக்கப்பட்டவன். முருகனின் அறுபடை வீடுகளையும், கன்னியாகுமரியிலிருந்து ஹரித்துவார், ரிஷிகேஷ், வாரணாசி வரை உள்ள பல இந்துக் கோவில்களுக்கும் சென்று வழிபட்டவன். மேல் மருவத்தூருக்கு 14 முறை விரதம் இருந்து இருமுடி எடுத்துச் சென்றவன். இந்து மதம் ஒரு அர்த்தமுள்ள மதம் என்பதை பல நூல்களை கற்றுத் தேர்ந்து தெளிவு பெற்றவன். அப்படிப்பட்டவன் இயேசு கிறிஸ்துவையும், நான் வெறுத்த கிருஸ்தவத்தையும் ஏற்றுக் கொள்ள எப்படி முடிந்தது?

நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. என்னை கன்வின்ஸ் பண்ணுவது என்பது சற்றும் எளிதான ஒரு காரியம் அல்ல. என் பார்வையிலிருந்து எதுவும் தப்புவது இல்லை. என் கணிப்பு தவறுவதும் இல்லை. மேலும் 38 ஆண்டுகளாக நிர்வாகத்தில் ஓர் அதிகாரியாக பல இடங்களில் பணிபுரிந்து, கலைத்துறை, இன்சூரன்ஸ், மார்கெட்டிங் என்று பல துறைகளில் ஈடுபட்டு பல ஆயிரக்கணக்கானவர்களுடன் பழகி தனிநபர் சைக்காலஜி, மாஸ் சைக்காலஜிகளைப் பயின்றவன். HRD மேனேஜராகப் பணியாற்றியவன். இத்தனை அனுபவங்களும் என்னை மிகவும் sharp ஆக்கி இருந்தன. என் அப்சர்வேஷன் மற்றும் அனலிடிக்கல் பவர்ஸ் மிகவும் கூர்மையாக இருந்தன. அந்த கூர்மையோடு என் முந்தைய வெறுப்பை ஒதுக்கி விட்டு ஒரு நடு நிலையுடன் எனக்கு அறிமுகமான அமெரிக்க கிறிஸ்துவ சகோதர்களின் வாழ்க்கையையும், கிறிஸ்துவ மதத்தையும் அதன் கோட்பாடுகளையும் அதன் உன்னதத்தையும் மிக நெருக்கமாக அலசி ஆராய்ந்து பார்த்தேன்.

## கிறிஸ்துவுக்குள் நான் மூழ்கி எடுத்த முத்துக்கள்

*"அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு ...அதைக் கைக்கொள்ளுகிறான்" - மத் 13 : 46*

வேதம் எவ்வளவு உண்மையானது, சத்தியமானது, காலம் கடந்து நிற்பது, ஒரு தன்னம்பிக்கையை கொடுப்பது, மனித நேயத்தை வளர்ப்பது, மனிதனை பாவ வாழ்க்கையிலிருந்து மீட்டு ஒரு பரிசுத்த வாழ்க்கைக்கு பக்குவப்படுத்தி கொண்டு செல்லுகிறது; பக்தி நெறியோடு அது எப்படி ஒரு உலகளாவிய சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துகிறது, உண்மையான மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் எப்படிப் பெறுவது, பரலோக வாழ்க்கையை இப்பூலோகத்திலேயே எப்படி அடைவது என்று நான் கிறிஸ்துவுக்குள் மூழ்க மூழ்க முத்துக்களை எடுத்துக்கொண்டே இருந்தேன்.

கிறிஸ்தவம் ஒரு மதம் அல்ல. இறைவனோடு ஒரு நெருங்கிய உறவு கொள்ள அது ஒன்றே வழி என்பதையும் கண்டேன். அவர்களின் பொறுமை, நிதானம், எதையும் மன்னிக்கும் மனோபாவம், இறைவனைத் தவிர வேறு எதற்கும் முக்கியத்துவம் கொடுக்காத ஒரு மனப்பான்மை, பரிபூரண சரணாகதி, விசுவாசம், ஒவ்வொரு காரியத்திற்கும் கர்த்தருக்கு நன்றி கூறும் பழக்கம், துன்பத்தையும் பாடுகளையும் கூட ஆண்டவர் நம்மை பக்குவப்படுத்தவே கொடுக்கின்றார் என்ற அசைக்க முடியாத இறை நிலை சார்பு, குடும்ப ஜெபம், அதனால் குடும்ப உறவுகளில் ஏற்படும் ஓர் அன்னியோன்யம், வாரம் ஒரு முறையேனும் கண்டிப்பாக குடும்பத்துடன் சர்ச் செல்லும் பழக்கம், அங்கு மனதை வேறு எதிலும் செலுத்தாது ஆண்டவரை மட்டும் நினைத்து ஆராதனை செய்து மெய் உருக களி கூர்ந்து பாடித் துதிப்பது, பின் ஒரு மணி நேரமாவது பரிசுத்த வாழ்க்கைக்கு தேவையான பல நல்ல கருத்துக்களை பாஸ்டர் வேதத்திலிருந்து எடுத்துக் கூறி நம்மை பக்குவப்படுத்தி நல்வழிப்படுத்துவது, நம் வியாதி, கஷ்டம், பிரச்சனை, திருமணம், வியாபாரம், குழந்தைகளுக்காக என்று விசேஷித்த ஜெபம், தேவாலயத்தில் இரண்டு மூன்று மணி நேரம் 2000, 3000 பேர்களோடு இருந்தாலும் அவ்வளவு நேரமும் முழுமையாக கர்த்தரோடும் பரிசுத்த ஆவியானவரோடும் நாம் உறவு கொண்டு சுவிசேஷம் பெற்ற ஒரு பரமானந்தம், புதியவர்கள் யாரேனும் சர்ச்சுக்கு அன்று வந்திருந்தால் அத்தனை கூட்டத்திலும் அவர்களைத் தனியாக இனம் கண்டு, வரவேற்று, அவர்களுக்காக போதகரும் சபை முழுமையும் ஜெபிப்பது, புதியவர்களை மற்றவர்கள் வரவேற்று, முகமன் விசாரித்து, ஒரு நட்பை ஏற்படுத்திக் கொள்வது, சபையைச் சேர்ந்த ஊழியக்காரார்கள் புதியவரின் குடும்பம் பற்றி விசாரித்து அவர்களின் இல்லம் சென்று அவர்களின் தேவைகளுக்காக ஜெபிப்பது போன்ற நல்ல, மனதுக்கு இனிமையான, வாழ்க்கைக்குத் தேவையான பல விஷயங்கள் என் கண் முன்னால் வந்து நின்றன.

## தூண்டப்பட்ட என் சிந்தனைகள்

*"நான் ராஜாவைக் குறித்துப் பாடின கவியைச் சொல்கிறேன்..." - சங் 45 : 12*

அதே சமயம் இவைகள் எல்லாம் நம் இந்து மதத்தில் இல்லையே என்ற கழிவிரக்கமும், ஆதங்கமும், வேதனையும் எனக்கு எழாமல் இல்லை. எந்த கோவிலுக்கு சென்றாலும், அது சிறிதாகவே இருந்தாலும் நம்மை எவருமே கண்டு கொள்வது இல்லை. நம் கஷ்டங்கள், பிரச்சினைகள், தேவைகளைக் கேட்டு நமக்காக பிரார்த்தனை செய்வார் யாரும் இல்லை. இறைவனை இரண்டு நிமிடம் கூட நிம்மதியாக, எவ்வித இடையூறும் இன்றி தரிசித்து வழிபடமுடியாதபடி இடித்துத் தள்ளுதல், தலையை நீட்டுதல், புழுக்கம், தேவையற்ற பேச்சு, புரியாத மந்திரங்கள், கோவிலுக்குள்ளேயே குப்பைகளையும், இலைகளையும், பழத்தோல்களையும் போட்டு ஆலயத்தின் புனிதத்தையே கெடுக்கிறோமே என்ற உணர்வு கூட இல்லாத அறியாமை, இறைவனுக்கு முன்பாக அதிகாரவர்க்கம், வசதி படைத்தவர், ஜாதி, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பாகுபாடு பிரித்து மரியாதையும், முக்கியத்துவமும் தந்து மற்றவர்களை ஒதுக்கி தள்ளும் ஒரு அறிவிலித்தனம். இந்து மதத்தில் சொல்லப்படாத, இல்லாத விஷயங்களே ஒன்றுமில்லை. எல்லாமே இருக்கிறது. ஆனால் அதைப் புரிய வைப்பவர் யார்? எடுத்துக் கூறுபவர் யார்? எல்லாமே வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மட்டுமே இருக்கிறதே!

## இயேசு ஒருவரே இரட்சகர்

*"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை..." அப் 4 : 12*

பாஸ்டர் சாலமன் ராஜா மிக அருமையான, பொருத்தமான உவமை ஒன்றை கூறினார். ஒருவன் தவறிப்போய் ஒரு பாழுங்கிணற்றில் விழுந்து விட்டான். வெளியே வர உதவி கேட்டு கதறுகிறான். அந்த பக்கமாக வந்த ஒருவர் அவனைப் பார்த்து, ஏம்பா பார்த்து வந்திருக்கக்கூடாது? பகல் நேரத்திலேயே இந்தப் பக்கம் யாரும் வரமாட்டாங்க. இருட்டுகிற நேரத்திலே இப்படி இந்த பக்கம் நீ வரலாமா? எல்லாம் விதி. கலியுகம். உன்னைச் சொல்லி என்ன பலன் என்று கூறியவாறே அவர் போய் விடுகிறார். இன்னொருவர் இவனுடைய அபயக்குரல் கேட்டு வந்து பார்த்து விட்டு, அடப்பாவி இந்த பாதையிலே ஏன் வந்தே? நேர்பாதையிலே போயிருக்கக் கூடாதா? இல்லை தெரிஞ்சவங்க நாலுபேர்கிட்ட கேட்டு இருக்கக் கூடாதா? அவங்க நல்ல வழி சொல்லியிருப்பாங்களே. துணைக்குக் கூட யாரையாவது கூட்டி வந்திருக்கலாமே எனப் பரிதாபப்பட்டு கூறி விட்டு அவரும் போய் விடுகிறார். இந்த இருவர் கூற்றிலும் ஏதேனும் தவறு இருக்கிறதா? இல்லையே. நல்லதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன பயன்? மூன்றாவதாக ஒருவர் வருகிறார். குரலைக் கேட்டவுடன் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் கிணற்றுக்குள் குதித்து, அவனை அந்த பாழுங்கிணற்றிலிருந்து காப்பாற்றி வெளியே கொண்டு வந்து பிறகு சொல்கிறார். இனிமேல் இந்தப் பக்கம் வராதே, நேர் வழியில் போ என்று. இப்போது வித்தியாசம் தெரிகிறதா? நமக்காக, நம் பாவங்களுக்காக, நோய்களுக்காக கஷ்டப்பட்டவர், சித்திரவதைப் பட்டவர், இரத்தம் சிந்தியவர், சிலுவையில் மரித்தவர் யார்? இந்த உலகத்தில் நமக்காக மரித்த தெய்வம் அவர் ஒருவரே. அவரே மெய்யான தேவன். பாவங்கள் என்ன என்று சொல்வதோடு நில்லாமல், நாம் செய்த பாவங்களையும் மன்னிப்பவர் அந்த கருணைக் கடவுள். பரிசுத்தராக தானும் வாழ்ந்து நம்மையும் பரிசுத்தப் படுத்துபவர். விதியென்றும், கர்ம வினை என்றும் கூறி அதிலேயே நம்மை உழல விடுபவர் அல்ல அவர். அவைகளிலிருந்து நம்மை மீட்டு இரட்சித்து வாழ வழிகாட்டுபவர் இந்த தேவாதி தேவன். தேவாலயங்களில் சிறுவர்களுக்கென்று பைபிள் ஸ்டடி கிளாசை நடத்தி அவர்களை சிறுவயது முதலே நெறிப்படுத்துவது, இளைஞர்களுக்கென பல இடங்களில் 2,3 நாட்கள் யூத் கேம்ப், கன்வென்ஷன்கள் நடத்தி அவர்களைப் பக்குவப் படுத்துவது, இப்படி ஒவ்வொன்றையும் நான் கிறிஸ்துவத்தில் பார்த்து பிரமித்துப் போனேன். ஜாதி, மொழி, நிறம், கலாச்சாரம் போன்ற பேதங்கள் அனைத்தையும் மறந்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பல நாட்டவரும் கார்த்தியையும் என்னையும் தங்களின் உடன் பிறவா சகோதரனாக ஏற்று எங்களுக்காக ஜெபித்து அன்பு காட்டியது போன்ற அனைத்து விஷயங்களும் தான் என்னை முழுமையாக இயேசு கிறிஸ்துவின் பக்கம் திருப்பியது. இன்று அதனால் நானும் என் குடும்பத்தாரும் இதுவரை பெற்றிராத ஆசீர்வாதத்தையும், அமைதியையும், சமாதானத்தையும், ஆனந்தத்தையும் பெற்று அனுபவிக்கிறோம்.

## என் குடும்பத்தில் விசுவாசத்தின் விதை

*"ஆவிக்கென்று விதைக்கிறவன்ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்" - கலா 6 : 8*

கர்த்தரால் கார்த்திக்கு ஏற்பட்ட முன்னேற்றத்தையும், எனக்கு கிடைத்த ஆசீர்வாதமான அனுபவங்களையும் நான் தொடர்ந்து கடிதம் மூலமாகவும் டெலிபோன் மூலமாகவும் என் மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் தெரிவித்து வந்தேன். பிரதர் வர்கிஸ் புலிக்கோட்டில் சென்னையில் இருந்த அவருக்கு தெரிந்த நண்பர் சாம் என்பவருக்கு எங்களைப் பற்றி தெரிவித்து, தாம்பரத்திலுள்ள என் குடும்பத்திற்கு அடிக்கடி சென்று ஆறுதல் கூறவும் எழுதினார். சாம் அங்கிளும், ஆண்ட்டியும் என் மனைவி மக்களைச் சந்தித்து ஜெபித்து ஒரு தமிழ் பைபிளையும் படிக்க கொடுத்து ஆறுதல் கூறி வந்தனர். என் கடிதங்களும், சாம் அங்கிள், ஆண்ட்டியின் தொடர்ந்த சந்திப்பு, ஜெபங்கள் அனைத்தும் என் குடும்பத்திலுள்ள அனைவரின் உள்ளத்திலும் விசுவாசத்தின் விதையை விதைத்தது. ஒரு முழுக் குடும்பமே கர்த்தரால் இரட்சிக்கப் படுவதை சாத்தான் விரும்புவானா? நம் விசுவாசத்தையும் உறுதியையும் குலைக்கும்படி ஏதேனும் அவன் செய்தாக வேண்டுமே. அப்படியே செய்தான்.

## சாத்தானின் முயற்சி - கார்த்திக் வாழ்வில் மீண்டும் சோதனை

*"...நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய்.." - ஏசாயா 43 : 2*

2001 ஜனவரி மாதம் 31ம் தேதி மீண்டும் கார்த்தியின் ஷண்ட் ஃபெயில் ஆகி அப்படியே தொய்ந்து விழ ஆரம்பித்தான். உடனடியாக தலையில் மீண்டும் ஒரு மேஜர் ஆபரேஷன் செய்யும் படியான ஒரு எமர்ஜென்சி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. எடுத்து கார்த்தியை செக்

பண்ணிவிட்டு, ஆபரேஷனுக்கு முன்பாக டாக்டர்கள் என்னை அழைத்தனர்.

ஜார்ஜ் ஜாயும் அப்போது என்னோடு இருந்தார். டாக்டர்கள் மிகவும் தயங்கித் தயங்கி உங்கள் மகனுக்கு உடனடியாக ஆபரேஷன் செய்து வேறு ஒரு ஷண்ட் போட்டாக வேண்டும். அவரது உயிருக்கோ அல்லது அந்த ஷண்ட் நல்லபடியாக வேலை செய்யும் என்பதற்கோ எந்த உறுதியும் கொடுக்க முடியாது. அப்படியே அவர் உயிர் பிழைத்தாலும் மீண்டும் அவர் தன் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப முடியுமா என்பது கேள்விக்குறியே. அவர் எழுந்து நடப்பதோ, வேலைக்குச் செல்வதோ, திருமணம் போன்ற நார்மல் வாழ்க்கைக்குத் திரும்புவதோ இயலாத காரியம் என்று மென்று விழுங்கி கூறினர். இதற்குள் எனக்கு இயேசுவின் கிருபையால் அவர் மீதும் அவருடைய வல்லமையின் மீதும் பரிபூரண விசுவாசம் ஏற்பட்டு இருந்தது. அந்த விசுவாசம் என் குரலில் ஒலிக்க நான் அந்த கிறிஸ்துவ டாக்டர்களிடம் கூறினேன். என் மகன் கண்டிப்பாக உயிர் வாழ்வான். அவனை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது. அவன் முழுமையாக குணம் அடைந்து எழுந்து நடப்பான் என்று எழுதித் தருகிறேன். இயேசு கிறிஸ்துவின் வல்லமையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. கார்த்தி என் மகன் அல்ல. அவன் இப்போது இயேசுவின் பிள்ளை. உங்களின் மருத்துவ இயலாமையை கூறி விட்டீர்கள். இனி ஆண்டவரின் அற்புதத்தைப் பார்ப்பீர்கள். Please go ahead with the surgery என்று கூறியவாறு டாக்டர்களின் ரூமிலிருந்து மிடுக்காக வெளியேறினேன்.

## கர்த்தர் ஆசீர்வதித்த ஆப்ரேஷன்

*“தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை” - லூக்கா 1:37*

அன்று மாலையே ஆபரேஷனுக்கு ஏற்பாடுகள் செய்தனர். ஜார்ஜ் உடனடியாக மற்ற நண்பர்களுக்கும் அமெரிக்காவில் பல இடங்களில் இருந்த அவரின் நண்பர்களுக்கும் டெலிபோன் மூலம் கார்த்திக்காக ஜெபத்தை ஏறெடுக்கும்படி வேண்டினார். நானும் ஜெபித்தேன். ஆண்டவரே இதுவே கார்த்திக்கு நடக்கும் கடைசி ஆபரேஷனாக இருக்கட்டும். ஆபரேஷன் நேரத்தில் அவனுடன் இருங்கள். டாக்டர்களுக்கு நல்ல ஞானத்தைக் கொடுங்கள். தங்களின் வல்லமையான கிருபையாலும், பிரசன்னத்தாலும் கார்த்தியை தாங்கியிருங்கள் என்று மனமுருக வேண்டிய பிறகு நான் கொஞ்சம் கூட கவலைப் படவே இல்லை. என்னுள் ஒரு பரிபூரண அமைதி நிலவியது. ஆப்ரேஷன் நடக்கும் போது ஆஸ்பத்திரியிலேயே என் அமெரிக்க நண்பர்கள் தொடர்ந்து ஜெபம் செய்து வந்தனர்.

ஆப்ரேஷன் முடிவதற்குள் அமெரிக்காவின் பல பாகங்களிலிருந்தும் பல போன் கால்கள். ஆண்டவர் அனைவரின் ஜெபத்தையும் கேட்டார். அற்புதம் புரிந்தார். ஆப்ரேஷன் முடிந்து வெளியே வந்த கார்த்தி அடுத்த 15வது நிமிடமே கண்திறந்து பார்த்து தெளிவாகப் பேசினான். அவனுடைய அதிவேக முன்னேற்றத்தைக் கண்டு டாக்டர்கள் அனைவருமே ஆச்சரியப்பட்டனர். வெரிகுட், வெரிகுட் என்றனர். இது கர்த்தர் ஆசீர்வதித்த ஆப்ரேஷன். இனி இந்த வார்த்தைகள் தான் உங்களிடமிருந்து வரும் என்றேன். என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுச் சென்றனர். அடுத்த நாளே கார்த்தி ICU விலிருந்து நார்மல் வார்டுக்கும், பின் ஒரு வாரத்தில் மீண்டும் ரீஹாபிலிடேஷன் சென்ட்டருக்கும் மாற்றப்பட்டான். அங்கு அவனுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகப் பேச்சும், பழைய நினைவுகளும் திரும்பி வந்தன. எவ்வித சப்போர்ட்டும் இன்றி வீல் சேரில் உட்காரவும் ஆரம்பித்தான். லிக்குவிட் சாப்பாட்டிலிருந்து செமி சாலிட் உணவிற்கும், பின் நார்மல் சாப்பாட்டிற்கும் மாறினான். டி.வி. பார்ப்பதிலும், பாட்டு கேட்பதிலும் ஆர்வம் காட்டினான்.

## தட்டுங்கள் திறக்கப்படும் - நான் தட்டாமலேயே கர்த்தர் மறுகதவைத் திறந்தார்

*“அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்” - ஏசாயா 65 : 24*

இண்டர்நேஷனல் மெடிக்கல் சர்வீஸஸின் டைரக்டராக இருந்த Mrs. Susan Baumgardner எனக்கு மிகவும் நெருங்கிய நண்பராகி விட்டார். கார்த்தி தன்னுடைய குடும்பத்துடனும் நண்பர்கள், உறவினர்கள் அருகிலும் இருந்தால் அவனுடைய ரிக்கவரி இன்னும் வேகமாக இருக்குமே என்று அவர் எங்களை பிளேன் மூலமாக இந்தியாவிற்கு மெடிக்கல் எவாக்குவேஷன் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இன்சூரன்ஸ் கம்பெனியிடம் பேசினார். ஆனால் அது ஒரு தவறான முன் உதாரணமாகிவிடும் என்றும் இதனால் நாங்கள் இதுபோன்று பல நோயாளிகளுக்கும் அனுமதி அளிக்க வேண்டி வரும், ஆகவே முடியாது என்று இன்சூரன்ஸ் கூறிவிட்டது . ஒரு பக்கம் கதவுகள் மூடிக்கொண்டால் ஆண்டவர் மறுபக்கம் திறந்துவிட மாட்டாரா? அந்த அற்புதத்தையும் கர்த்தர் செய்தார். கார்த்தியை வேலைக்கு செலக்ட் பண்ணின டேட்டாமேட்டிக்ஸ் கம்பெனியின் பிரசிடெண்ட் அவராகவே எனக்கு போன் செய்து கார்த்தியும், நானும், கார்த்தியை பிளேனில் கவனித்துக் கொள்ள ஒரு ஆண் நர்சும் அமெரிக்காவிலிருந்து சென்னை வந்து திரும்பிச் செல்வதற்கு ஆகும் விமான பயணத்திற்கான 15,800 அமெரிக்க டாலர்களை அதாவது 7 1/2 லட்சம் ரூபாயை நான் கேட்காமலேயே அவர் தானாகவே தருவதற்கு முன் வந்தார். எனக்கு என்ன கூறுவதென்றே தெரியவில்லை. ஆண்டவரின் கருணையை நினைத்துக் கண்ணீர் விடத்தான் என்னால் முடிந்தது. இது ஒரு சிறிய தொகை அல்ல. டேட்டாமேடிக்கஸ் கம்பெனியில் கார்த்தி முழுமையாக ஒரு மாதம் கூட வேலை செய்யவில்லை. மேலும் இன்னும் ஒரு மாதத்திற்குப் பிறகு அதாவது ஜூன் மாதம் 1ம் தேதிக்குப் பிறகு கார்த்தியை ரீஹாபிலிடேஷன் சென்ட்டரில் வைத்து கவனிக்க ஆகும் செலவைத் தருவதற்கு இன்சூரன்ஸ் மறுத்து விட்டது. அங்கேயே வைத்து கவனிப்பதென்றால் அதற்குரிய செலவை இனி நான் தான் தரவேண்டும். அதாவது ஒரு நாளைக்கு 500 டாலர்கள், இந்திய ரூபாய் கணக்கில் சுமார் 24,000 ரூபாய் ஒரு நாளைக்கு. என்னால் நினைத்தும் பார்க்க முடியாத தொகை. இல்லையேல் நான் இருக்கும் இடத்திற்கு கார்த்தியை கொண்டு சென்று அங்கு வைத்து வைத்தியம் செய்ய வேண்டும். அதையும் என்னால் நினைத்துப் பார்க்க முடிய வில்லை. மேலும் நான் இருந்த அப்பார்ட்மெண்டின் ரெண்ட்டல் காண்டிராக்ட் மே மாதம் 31ம் தேதியோடு முடிவடைகிறது. என்னுடன் ஷேர் பண்ணிக்கொண்டிருந்த மற்ற மூன்று நபர்களும் வேறு ஊர்களில் வேலை கிடைத்து அங்கு சென்றுவிட்டனர். நான் தனியாக அப்பார்ட்மெண்ட்டில் இருப்பதும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. மாத வாடகை 950 டாலர்கள். அதாவது ரூ.45,600. இது தவிர இன்னும் இதர செலவுகள் இருக்கிறது. ஆக ஜூன் 1ம் தேதிக்குப் பிறகு நானும் கார்த்தியும் எங்கு எப்படி இருப்பது, எப்படி

இந்தியாவிற்கு திரும்பிச் செல்வது, அதற்குரிய பணத்திற்கு என்ன செய்வது என்று நான் திகைத்துப் போய் திக்கு முக்காடிக் கொண்டிருந்த நிலையில் டேட்டாமேட்டிக்ஸ் பிரசிடெண்ட் அவராகவே இவ்வளவு பெரிய தொகையை எனக்கு இனாமாகத் தருகிறார் என்றால் இதை கர்த்தரின் அபரிமிதமான அற்புதம், கருணையின்றி வேறு என்ன என்று கூறுவது? கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரை நன்றியோடு துதித்தேன்.

## ஞானஸ்நானத்தால் மீண்டும் பிறந்தோம்

*"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்*
*இரட்சிக்கப்படுவான்". - மாற்கு 16 :16*

கர்த்தரிடம் நான் வேண்டிக் கொண்டதெல்லாம் இதுதான். ஆண்டவரே எங்களை இந்தியாவிற்கு அனுப்புவதற்கு முன்பாக கார்த்தியை எழுந்து நடக்க வையுங்கள். அவனை வீல் சேரில் நான் அழைத்துச் செல்ல மாட்டேன். அது உமக்கு மகிமையும் பெருமையும் தராது என்று வேண்டிக் கொண்டேன். என் வேண்டுதலுக்குரிய பதிலை ஆண்டவர் ஒரு விசிட்டிங் இண்டியன் பாஸ்டர் டாக்டர் பால்சனின் தீர்க்கதரிசனத்தின் மூலம் தந்தார். கார்த்தியைப் பார்க்க வந்த அவர் கிளம்புவதற்கு முன் ஜெபம் பண்ணினார். அப்போது அவர், பிரதர் பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் ஒரு விஷயத்தைக் கூறும்படி எனக்கு உணர்த்துகிறார். மருத்துவத்தால் முடியாததை கர்த்தர் கண்டிப்பாக தம் கிருபையால் கார்த்தியைக் குணப்படுத்துவார். விசுவாசம் கொள்ளுங்கள். ஆனால் அது இங்கே நிகழப் போவது இல்லை. இந்தியாவில் தான் நடைபெறும். அவன் இங்கு குணமானால் அது ஒரு சில நூறு பேர்களுக்கு மட்டுமே தெரிய வரும். ஆனால் அது இந்தியாவில் நிகழும் போது அதனால் பல்லாயிரக்கணக்கானவர்கள் மீட்பும் இரட்சிப்பும் அடைவர். கர்த்தரின் நாமம் அதனால் மகிமைப்படும். அதுதான் அவர் சித்தம் என்றார். அவர் கூறியது எனக்கு சரியெனப்பட்டது. அமெரிக்காவை விட்டுக் கிளம்பும் முன் நானும், கார்த்தியும் ஞானஸ்நானம் எடுக்க என்னுள் ஒரு உணர்வு தோன்றியது. கர்த்தர் அதையும் வாய்க்கச் செய்தார். கார்த்தி வீல் சேரில் இருந்தபடியே ஞானஸ்நானம் எடுக்க விசேஷ ஏற்பாடுகள் சிட்டி பைபிள் சர்ச்சில் செய்யப்பட்டன. ஞானஸ்நானம் எடுத்தபோது அது வரை கைகளைத் தூக்க முடியாமல் இருந்த கார்த்தி முதன் முறையாக இரண்டு கைகளையும் தூக்கினான். எங்கள் ஞானஸ்நானத்திற்கு முன்பாக நான் கொடுத்த சாட்சியம் பல அமெரிக்கர்களிடமிருந்து கண்ணீரையும், கரகோஷத்தையும் வரவழைத்தது. இந்திய கிறிஸ்தவ நண்பர்கள் அனைவரும் அன்று எங்கள் ஞானஸ்நானத்தைக் கண்டு களித்து அதைத் தங்களின் ஒரு குடும்ப விழாவாகவே கொண்டாடினர். எங்கள் வாழ்வில் மறக்க முடியாத ஒரு நாள் அது!

## புதுவாழ்வு பெற்று தாயகம் திரும்புதல்

*"நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல்...தேவனுடைய வீட்டாருமாய் இருந்து..." - எபேசியர் 2 :19*

அமெரிக்காவில் நான் சரியாக 8 மாதங்கள் இருந்த பின்பு 2001 மே மாதம் 27ம் தேதி நானும் கார்த்தியும் அவனைப் பார்த்துக் கொள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து வந்திருந்த Mr. ஸ்டீவும் போர்ட்லேண்டிலிருந்து இந்தியாவுக்கு பிளேன் ஏறினோம். இயேசுவின் புனிதமான இரத்தத்தால் இன்று உடன் பிறவா சகோதர சகோதரிகளாக ஆகி விட்ட என் அமெரிக்க இந்திய நண்பர்கள் எனக்கும் கார்த்திக்கும் துணிமணிகள் எடுத்துக் கொடுத்து பலவிதமான வெகுமதிகளையும் கொடுத்து ஏர்போர்ட் வரை வந்து கண்ணீர் மல்க எங்களுக்குப் பிரியா விடை கொடுத்து அனுப்பினர். இன்று வரை அவர்கள் எங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து ஈ–மெயில் மூலமாக வாரம் ஒரு முறையேனும் கார்த்தியின் உடல் நலம் குறித்து விசாரித்து வருகின்றனர். அமெரிக்காவிலிருந்து மிகக் குறுகிய விடுமுறையில் இந்தியா வந்த ஒரு சிலர் கார்த்தியைப் பார்ப்பதற்காக கேரளாவிலிருந்தும், பெங்களூரிலிருந்தும் வந்து பார்த்து விட்டு சென்றனர். இங்கு எங்களுடன் பல ஆண்டுகளாகப் பழகிய பலர் இன்னும் கார்த்தியை வந்து பார்க்க வில்லை. ஆனால் இன்று உலகம் முழுவதிலுமிருந்து எனக்காகவும், கார்த்திக்காகவும் எந்த உதவியைச் செய்யவும், தினமும் ஜெபம் பண்ணவும் பல சகோதரர்களை கொடுத்து என் குடும்பத்தையே விரிவு படுத்தியதற்கு நான் எவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்? எங்கள் மீது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வைத்துள்ள தயவை, இரக்கத்தை, அவருடைய அளவில்லாத ஆசீர்வாதத்தை எண்ணி எங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறோம்.

## முடியாததையும் முடித்துக் கொடுத்தார் கர்த்தர்

*" என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்" - ஏசாயா 41:10*

போர்ட்லேண்டிலிருந்து சான் பிரான்ஸிஸ்கோ, தாய்லாந்து, மலேசியா வழியாக சென்னை வந்து சேர 36 மணிநேரம் ஆகும். அவ்வளவு நீண்ட விமான பயணத்தை கார்த்தி எப்படி தாங்கிக் கொள்வானோ என்று கலங்கினேன். இடையில் ஏதேனும் கார்த்திக்கு மோசமானால்? 2,3 மணி நேரத்திற்கு மேல் அவன் வீல் சேரில் உட்கார்ந்ததும் இல்லை. பிளேனில் உட்கார்ந்த உடனேயே எங்கள் பயணத்தையும், கார்த்தியையும் ஆசீர்வதிக்கும்படி கர்த்தரிடம் வேண்டிக் கொண்டேன். என் ஜெபத்திற்கு பதிலளித்து எந்தவித சிரமமும் இல்லாமல் கார்த்தியை அந்த நீண்ட பயணத்தை தாங்க வைத்தார். பிளேனில் கண்களில் கண்ணீர் திரையிட என் மனத் திரையில் காட்சிகள் ஒவ்வொன்றாய் ஓட, கடந்த நாட்களில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். கார்த்தி அமெரிக்காவிற்கு வந்து 25 நாட்களே உண்மையில் வேலை செய்து உள்ளான். முழுமையாக ஒரு மாதம் கூட இல்லை. ஆனால் அவன் மருத்துவச் செலவுகள் மூன்றரை கோடி ரூபாயையும் தாண்டி விட்டது. மூன்றரை கோடியில் எத்தனை சைபர்கள் இருக்கின்றன என்று கூட நான் நினைத்துப் பார்த்ததில்லை. இன்சூரன்ஸ் இருந்ததால் பிழைத்தேன். இல்லையேல் என்னால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. மேலும் இந்தியாவுக்குத் திரும்புவதற்கு ஏழரை லட்சத்தையும் என்னால் புரட்டியிருக்கவே முடியாது. ஜூன் மாதம் 1ம் தேதிக்குப் பிறகு நானும் கார்த்தியும் அங்கும் இருக்க முடியாமல் இங்கேயும் வரமுடியாமல் நடுத்தெருவில் நின்றிருப்போம். ஆனால்

ஆண்டவரை விசுவாசித்தபோது அவர் முடியாததையும் முடித்துக் கொடுத்தார். Praise the Lord.

## கர்த்தாவே என் குடும்பத்தில் ஒவ்வொருவரையும் தொட்டு ஆசீர்வதியும்

*"இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது" – எபி 8 : 8*

இன்னொரு விஷயம் என் மனதை அழுத்திக் கொண்டே இருந்தது. நாங்கள் ஞானஸ்நானம் எடுத்தது பற்றியும், மனம் மாறி பிறகு மதம் மாறியது பற்றியும் என் குடும்பத்தார்களும், உறவினர்களும், நண்பர்களும் எங்களை எப்படி எதிர் கொள்வார்களோ என்று ஒரே கலக்கமாக இருந்தது. என் தந்தை ஸ்தானத்தில் உள்ள என் அண்ணாவும் கிறிஸ்தவ மதத்தை அடியோடு வெறுப்பவர். என் மனைவி மேல் மருவத்தூர் ஆதி பராசக்தியின் மேல் அதிக பக்தியும் ஈடுபாடும் கொண்டவள். காயத்ரி, சக்தி இருவரும் அதே மாதிரி. எங்கள் குடும்ப நண்பர்கள் அனைவரும் ஓம் சக்தி மன்றத்தைச் சேர்ந்தவர்கள். முன்பு போல் அவர்கள் இனி பழகுவார்களா? என் மனைவி தினமும் காலையிலும், மாலையிலும் வீட்டில் காமாட்சி விளக்கேற்றி 108 மந்திரங்களைச் சொல்லுவாள். செவ்வாய், வெள்ளி மற்றும் விசேஷ நாட்களில் எல்லா சாமி படங்களையும் துடைத்து பொட்டுவைத்து, பூப்போட்டு, விளக்கேற்றி சாமி கும்பிடுவாள். அப்போது நான் என்ன செய்வது? இதனால் குடும்பத்தில் குழப்பங்கள் வருமோ? ஆண்டவரே நீரே துணை. அனைத்தையும் அறிந்தவர் நீர். முழுமையாக என்னை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறேன். எல்லா பிரச்சினைகளையும் சமாளிக்க எனக்கு வல்லமையும், பொறுமையையும் தாரும். என் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் தொட்டு ஆசீர்வதியும். உம்முடைய அன்பை அவர்கள் புரிந்து கொள்ளும்படி அருள் புரியும் ஆமென் என்று உளமாரப் பிரார்த்தித்தேன். ஆண்டவர் அற்புதம் செய்து என் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தார்.

## டாடி, உங்கள் இயேசு உண்மையிலேயே பவர்புல்தான் - சக்திக்கு ஆசீர்வாதம்

*"அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே" சங் 77 : 14*

முதலில் என்னுடைய இளைய மகன் சக்தி இரட்சிக்கப்பட்டான். அவன் CBSE பாடத்திட்டத்தில் KVயில் 10ம் வகுப்பை முடித்து விட்டு XI க்கும் XII க்கும் ஸ்டேட் சிலபசுக்கு மாற விரும்பினான். அருகில் நல்ல பிரபலமான சியோன் ஸ்கூலில் சேர வேண்டும் என்றான். நான் அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்து ஒரு வாரம் தான் ஆகியிருந்தது. அப்ளிகேஷன் வாங்க என் மகன் சக்தியையும் அழைத்துக் கொண்டு எனது டு வீலரில் ஏறப்போகும் போதுதான் கூறினான். அப்பா, அந்த ஸ்கூலில் 80% கீழே மார்க் வாங்கி இருந்தால் அப்ளிகேஷன் தரமாட்டார்களாம் என்றான். என் மகனோ 58.9% மட்டுமே எடுத்துள்ளான். எனக்கு அந்த ஸ்கூலில் யாரையும் தெரியாது. என்ன செய்ய? கிளம்புவதற்கு முன் ரோட்டிலேயே நின்று கொண்டு ஜெபம் பண்ணினேன். ஃபாதர், சியோன் ஸ்கூலில் சக்திக்கு அட்மிஷன் வாங்கி கொடுங்கள். எனக்கு அங்கு யாரையும் தெரியாது. நீங்களே எனக்குத் துணை என்று ஒரு நிமிடம் கண்மூடி ஜெபித்துவிட்டு அந்த ஸ்கூலுக்கு சென்றோம். அங்கு இரண்டு டீச்சர்களிடம் அப்ளிகேஷன் கேட்டேன். உடனே பையனின் மார்க் என்ன என்று கேட்டனர். சொன்னவுடன் 80% க்கு குறைவாக இருந்தால் அட்மிஷன் தரமாட்டோம். தொந்தரவு பண்ணாமல் போங்க சார் என்றனர். பிரின்ஸ்பாலைப் பார்க்க முடியுமா என்றேன். யாரைப் பார்த்தாலும் இதைத்தான் சொல்லுவார்கள். பிரின்ஸ்பாலைப் பார்க்கணும்னா அந்தக் கியூவிலே போய் நில்லுங்கள்னு ஒரு பெரிய கியூவைக் காட்டினார்கள். ஆண்டவரை வேண்டிக் கொண்டே போய் கியூவில் நின்றேன். எனது முறை வந்தவுடன் அந்த ரூமுக்குள் சென்று என்னை நான் அறிமுகம் செய்து கொண்டேன். பிரின்ஸ்பாலுக்கு எதிரில் உட்கார்ந்து இருந்த ஒருவர் என் பக்கம் திரும்பி – சார் நீங்க டில்லியில் இருந்த தாயப்பனா? டில்லி தமிழ்ச் சங்கம், டிராமா, பாட்டெல்லாம் பாடுவீர்களே அவரா? சினிமா நடிகர் டில்லி கணேசனின் குரு தானே நீங்கள்? என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் யார் என்றே எனக்குத் தெரியவில்லை. பார்த்த ஞாபகமும் இல்லை. என்னைப் பற்றி நானே சொல்வதற்குப் பதிலாக கர்த்தர் இன்னொருவரை அங்கு ஏற்பாடு செய்து வைத்து விட்டார். Praise the Lord. அவர் பிரின்ஸ்பால் பக்கம் திரும்பி, "சார் இவர் யார் தெரியுமா? டில்லியில் மிகப் பெரிய ஆள் சார். எல்லோருக்கும் இல்லையென்று சொல்லாமல் ஹெல்ப் பண்ணுவார். டிராமா, தமிழ்ச் சங்கம் இதிலெல்லாம் ரொம்ப ஃபேமஸ். டில்லி கணேசனை முதன் முதலில் ஸ்டேஜில் ஏற்றி ஒரு நடிகனாக உருவாக்கியவர் இவர்தான் என்று அவரே பல முறை TV யிலும் பேப்பரிலும் கூறியுள்ளார் என்று என்னைப் பற்றி ஒரு பெரிய லெக்சரே அடித்தார். எனக்கு ஆச்சரியமான ஆச்சரியம். பிரின்ஸ்பால் என்னிடம் Nice to meet you. என்ன விஷயமாக வந்தீர்கள் என்றார். விஷயத்தை கூறினேன். மார்க் என்ன என்று கேட்டார். 58.9% என்றேன். சில வினாடிகள் அவர் பேசவே இல்லை. பிறகு சார் நான் மிகவும் தர்மசங்கடமான ஒரு நிலையில் உள்ளேன். 80% க்கு குறைந்து நான் இதுவரைக்கும் யாருக்கும் அட்மிஷன் கொடுத்தது இல்லை என்றார். நான் என் மகன் தற்போது இந்த அளவு மார்க் வாங்கியதே அதிகம் என்று சொல்லி என் மூத்த மகனுக்கு ஏற்பட்ட கதியைக் கூறி, நான் 8 மாதங்கள் அமெரிக்காவில் இருந்ததையும், அப்போது என் குடும்பம் அனுபவித்த வேதனைகளையும் கூறி தற்போது கிறிஸ்துவுக்குள் வந்துள்ளதையும் சொல்லி, இப்போது நான் இங்கு வந்து விட்டதால் என் மகன் சக்தியின் படிப்பை நான் பார்த்துக் கொள்வேன் என்றும் அவனுடைய வெற்றிக்கு நான் கேரண்டி என்றும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அட்மிஷன் கேட்கிறேன் என்றும் மிக உருக்கமாக வேண்டினேன். ஒரு நிமிடம் என்னை உற்றுப் பார்த்தவர் ஆல்ரைட், ஐ வில் கிவ் ஹிம் அட்மிஷன், டேக் கேர்ஆப் கிம் என்று கூறி அட்மிஷனுக்கு சீட்டு கொடுத்தார். வெளியில் வந்தால் சக்தியுடன் படித்த இருவர் 74% ,76% மார்க் எடுத்தவர்கள், அட்மிஷன் கிடைக்காமல் நிற்பதைக் கண்டு என் மகன் அப்பா உங்கள் இயேசு உண்மையிலேயே ரொம்ப பவர்புல் தான் என்றான். என்னோட இயேசு இல்லடா. நம்மோட இயேசு என்று சொல். அவரை ஏற்றுக் கொள்கிறாயா? என்றேன். எஸ் டாடி என்றான். முதலில் பயாலஜி குருப் கிடைத்தாலும் அடுத்த வாரமே அவன் விரும்பிய கம்ப்யூட்டர் குரூப்பும் அவனுக்கு கிடைத்தது. அதன் பின்பு அவனை சித்தேரி மலையில் 3 நாட்கள் நடந்த கிறிஸ்டியன் யூத் கேம்பிற்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவன் புடம் போடப்பட்டு இன்று ஒரு பத்தரை மாற்றுத் தங்கமாக, கிறிஸ்துவுக்குள் ஒரு உறுதியுள்ள இளைஞனாக வளர்ந்துள்ளான். அவனுடைய பழைய சோம்பேறிப் பழக்க வழக்கங்கள் எல்லாம் தானாகவே மாறி, படிப்பிலும் அக்கறை காட்டி இன்று நல்ல மார்க்குகள் வாங்குவதோடு

மட்டுமல்ல, வகுப்பில் இன்று பல பாடங்களில் அவன் தான் பர்ஸ்ட் ரேங்க். Praise the Lord. Thank you Jesus.

## இயேசுவே, என்னைக் காப்பாற்று - காயத்ரியின் கதறல்

*"ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன்" - சங் 50 : 15*

அடுத்து எனது மகள் காயத்ரி இரட்சிக்கப்பட்டாள். அவளுடைய அண்ணண் மீது அவளுக்கு அளவு கடந்த பாசம். அவனுக்கு இப்படி ஆன பிறகு அவளுக்கு எல்லா தெய்வங்கள் மீதும் இருந்த நம்பிக்கை போய்விட்டது. அவள் எந்த தெய்வத்தையும் கும்பிடுவது கிடையாது. நான் அமெரிக்காவில் இருந்த போது என் மனைவி பல கோவில்களுக்குச் சென்று அபிஷேகம் செய்ய வேண்டும் என்றால் டு வீலரில் கூட்டிச் செல்வாள். ஆனால் கோவிலுக்குள் போகாமல் வெளியிலேயே வண்டியில் காத்துக் கொண்டு இருப்பாள். சாம் அங்கிள் வந்து ஜெபம் பண்ணும் போதும், நான் அனுப்பிய கடிதங்களில் இயேசு செய்த அற்புதங்களைப் படிக்கும் போதும், நான் வந்த பிறகு என் சாட்சியத்தைக் கேட்ட பிறகும் பட்டும் படாமலும் நான்கமிட்லாகவே இருந்தாள். என் மனைவி, மகளாகவே இருந்தாலும் நான் யாரையும் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. பக்தி என்பது தானாக வர வேண்டும். அதைத் திணிக்க முடியாது. ஆனால் ஆண்டவரிடம் என் குடும்பத்தருக்காக தொடர்ந்து வேண்டிக் கொண்டு மட்டும் இருந்தேன். என் மகள் காயத்ரியின் 21வது பிறந்த நாள் 30.7.01 அன்று வந்தது. அன்று காலை முதலே அவள் அடி மனதில் ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப் போவதாக ஒரு உள்ளுணர்வு அவளை அலைக் கழித்துக் கொண்டே இருந்தது. ஒரு நிலைக்கு மேல் அதைத் தாங்க முடியாமல் அவளையும் அறியாமல் அவள் இயேசுவிடம் பிரேயர் செய்து இருக்கிறாள். இயேசுவே எந்த ஆபத்தும் அணுகாதபடி என்னை காத்துக் கொள்ளும் என்று. அதன் பிறகு அதை அடியோடு மறந்தும் விட்டாள். எப்போதுமே அவள் சுடிதார் தான் அணிவாள். அன்று விசேஷமாக சேலை கட்டிக் கொண்டு தாம்பரத்தில் உள்ள SSI கம்ப்யூட்டர் கிளாசுக்குச் சென்று விட்டு TVS சேம்பில் ஹெவி டிராபிக் உள்ள GST ரோட்டில் வந்து கொண்டிருந்தாள். அப்போது அவளின் சேலை முந்தானை டூவீலரின் பின் சக்கரத்தில் சிக்கி அவளை அப்படியே அசைய முடியாதபடி பின்னுக்கு இழுத்தவுடன் அவளையும் அறியாமல் இயேசுவே என்னை காப்பாற்றும் எனக் கத்தியிருக்கிறாள். அவ்வளவு தான் அவளுக்கு நினைவு இருந்திருக்கிறது. சிறிது நேரம் கழித்து கண் விழித்துப் பார்த்த போது அவள் பிளாட்பாரத்தில் பேக் வீலில் இருந்து முந்தானை எடுக்கப் பட்ட நிலையில் வேர்த்து விறுவிறுத்து நடுங்கிக் கொண்டு இருந்திருக்கிறாள். யார் அவளை அந்த ஹெவி டிராபிக் உள்ள நடுரோட்டிலிருந்து பிளாட்பாரத்திற்கு கொண்டு வந்தது? யார் அவளை வண்டியிலிருந்து இறக்கியது? முந்தானையை விடுவித்தது என்றே தெரியவில்லை. மிகப் பெரிய ஆக்ஸிடெண்ட் ஆக ஆகியிருக்க வேண்டிய ஒன்றை, ஒரு சிறிய காயம் கூட இல்லாமல் கர்த்தர் அவளைக் காப்பாற்றி விட்டார். கண்ணீர் மல்க தேங்க் யூ ஜீஸஸ் என்று நூறு முறை சொல்லிக் கொண்டு, நடந்ததை அவள் சொன்ன போது எங்களுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. உன்னை விட்டு விலகுவதுமில்லை நான் உன்னை கைவிடுவதுமில்லை என்று வேதத்தில் கூறியுள்ளபடி கர்த்தர் அவளைக் கைவிடாது பெரிய விபத்திலிருந்து காப்பாற்றி இரட்சித்தார். பின்பு அவள் வாழ்க்கையிலும், படிப்பிலும் பல அற்புதங்களை ஆண்டவர் செய்து தான் ஒரு உயிருள்ள தேவன், காக்கும் கடவுள், ஜெபத்தைக் கேட்டு அரவணைக்கும் ஆண்டவர் என்பதை அவளுக்கு உணர்த்தினார்.

## இயேசு சாலக்குடியில் மட்டும்தான் இருக்கிறாரா?

*"நீ விசுவாசித்தால் தேவ மகிமையை காண்பாய்" - யோவான் 11 : 40*

என்னுடைய மனைவி விளக்கேற்றுவது, கோலம் போடுவது, சுவாமி படங்களை வைத்துப் பூஜை பண்ணுவது, கோவிலுக்குப் போவது, அஷ்டமி, நவமி, நல்ல நேரம் பார்த்து ஒரு காரியத்தைச் செய்வது போன்ற இந்து மத சடங்கு சம்பிரதாயங்களை படிப்படியாக, ஒவ்வொன்றாக அவள் தானாகவே நிறுத்தி விட்டு, இயேசு கிறிஸ்துவை மட்டுமே ஆராதித்துக் கொண்டும், பைபிளும் கையுமாகவே இருந்த போதும் அவள் விசுவாசத்தில் அதிகம் வளர்ந்து பலப்படவில்லை. அவளின் அக்கா மகளுக்குத் தெரிந்த ஒரு கிறிஸ்தவ சகோதரி கேரளாவில் உள்ள சாலக்குடி டிவைன் ரெட்டிரீட் சென்ட்டர் பற்றியும், அங்கு நடக்கும் பல அற்புதங்களைப் பற்றியும் கூற, அங்கு கார்த்தியை அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்து விட்டாள். எனக்கு அங்கு செல்ல விருப்பம் இல்லை. இயேசு சாலக் குடியில் மட்டும் தான் இருக்கிறாரா? அல்லது அங்கு மட்டும் தான் அற்புதங்கள் புரிவாரா? மனதார வேண்டிக் கொண்டால் ஆண்டவர் இங்கும் அற்புதங்கள் புரிவார் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. இதனால் என் வீட்டில் அமைதியும் சற்று குறையும் நிலை ஏற்பட்டது. வேறு வழியின்றி ஆண்டவரிடம் மண்டியிட்டு முறையிட்டு விட்டு, கார்த்தியையும் என் மனைவியையும் அழைத்துக் கொண்டு சாலக்குடி ரெட்ரீட் சென்டர் சென்று ஒரு வாரம் தங்கியிருந்தேன். காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை தினமும் தொடர்ந்து நடந்த பிரேயர்கள், தேவ செய்திகள், துதிப்பாடல்கள், அற்புதங்கள், அனைத்தும் என் மனைவியின் விசுவாசத்தை பல மடங்கு பலப்படுத்தி, கிறிஸ்துவுக்குள் அவளை வளரச் செய்தது. ஆண்டவர் செய்யும் எதுவும் அவரை விசுவாசிப்பவர்களுக்கு நன்மையாகவும், ஆசீர்வாதமாகவுமே இருக்கும் என்று பின்னால் நான் உணர்ந்து கொண்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## நாங்கள் கிறிஸ்துவுக்கு நற்சாட்சிகளானோம்

*"கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப் பட்டபடியே..." -1 கொரி 1 : 4*

எங்களது நண்பர்கள், உறவினர்கள், மற்றும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என்று தினமும் கார்த்தியைப் பார்க்க பலர் வந்த வண்ணமாகவே இருந்தனர். நாங்கள் கிறிஸ்தவர்களான விஷயம் தெரிந்து, பல இடங்களில் இருந்து முன் பின் தெரியாத நிறைய கிறிஸ்தவ சகோதர, சகோதரிகளும் என் வீடு தேடி வந்தனர். என் சாட்சியத்தைக் கேட்டு மகிழ்ந்து கர்த்தரைப் போற்றி துதிப்பார்கள். அவர்கள் உரத்த குரலில் பாடும் கிறிஸ்தவ ஸ்தோத்திர பாடல்களும், ஜெபங்களும் என் வீட்டிலிருந்து எப்போதும் ஒலித்துக் கொண்டே

இருப்பதைக் கேட்டு, தீவீர இந்துவாகவும் ஆதிபராசக்தி பக்தர்களாகவும் இருந்த இவர்கள் எப்படி தீவிர கிறிஸ்தவர்களாக மாறினார்கள் என்று அறிய ஆவலோடு பலர் வந்தனர். இவர்கள் அனைவருக்கும் என் சாட்சியத்தோடு ஒரு சிறிய உதாரணத்தையும் கூறினேன்.

## யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

*"எனக்கு சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்" - பிலி 1:12*

நானும் சக்திவேல் என்பவனும் சிறுவயது முதலே மிக நெருங்கிய நண்பர்கள். ஒன்றாக வளர்ந்தோம், படித்தோம், விளையாடினோம். நானின்றி அவன் இல்லை. அவனின்றி நான் இல்லை என்கிற அளவுக்கு எங்களுக்குள் ஓர்ஆழமான பிடிப்பு. அவன் பரம்பரை பணக்காரன். நானோ மிடில் கிளாஸ். இதுதான் வித்தியாசம். நாங்கள் பிரிந்ததே இல்லை. என் நண்பனைப் பற்றி யாராவது குறை கூறினாலும், எனக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்து விடும். அவனுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். ஒரு சமயம் என் மகனுக்கு உடம்புக்கு சுகமில்லாமல் போய், மிகவும் சீரியஸாகி, ஆஸ்பத்ரியில் அட்மிட் ஆனான். உடனே ஆபரேஷன் செய்ய வேண்டும். இல்லையேல் உயிர் பிழைப்பது கடினம் என டாக்டர்கள் கூற நான் பணத்துக்காக பலரிடம் அலைந்து விட்டு கடைசியில் என் உயிர் நண்பனிடம் கேட்டேன். அவனுக்கு என் கஷ்ட நிலை தெரியும். இருந்தும் அவன் ஏதேதோ சாக்குப்போக்குகள் கூறி பணம் தரவில்லை. நான் என்ன செய்வது என்று கண்ணீரோடு கலங்கிய போது, இதுவரை எந்தக் காரணமும் இன்றி வெறுத்து ஒதுக்கி நான் அவமானப்படுத்தி வந்த, அடுத்த வீட்டு ஆபிரகாம், நான் கேட்காமலேயே என் நிலை தெரிந்து எனக்குப் பணம் கொடுத்து உதவி என் மகனின் உயிரைக் காப்பாற்றினான். இப்போது கூறுங்கள். நான் யாரை நண்பன் என்று அழைப்பது? 58 ஆண்டுகள் உயிர் காப்பான் தோழன் என்று நான் நம்பி இருந்த சக்திவேலையா? அல்லது எக்காரணமும் இன்றி, நான் வெறுத்து ஒதுக்கினாலும், அதையெல்லாம் மனதில் கொள்ளாமல் என்னைப் பெரிய மனதுடன் மன்னித்து, எனக்கு உரிய நேரத்தில் உதவி, என் மகனின் உயிர் காத்த ஆபிரகாமையா? இதுதான் என் வாழ்க்கையில் இப்போது நடந்து உள்ளது எனக் கூறி, இயேசுபிரான் எனக்கும் என்குடும்பத்திலுள்ள வர்களுக்கும் செய்துள்ள இன்ன பிற அதிசயங்களையும் கூறுவேன். தேவாலயத்தில் பிறர் கூறிய சாட்சியங்களையும் பாஸ்டர் கூறிய தேவ செய்திகளையும், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நல்லெண்ணத்தோடு கூறுவேன். அவர்கள் பதில் ஏதும் கூறாமல் ஒரு புதிய சிந்தனையோடும், குழப்பத்தோடும் செல்வார்கள். என் அனுபவங்கள் சிலருக்கு அவர்களுக்குள் ஒரு புதிய தேடலுக்கு வழி வகுத்தது. இதனால் நாங்கள் பழைய நண்பர்கள் சிலரை இழந்துள்ளோம். என்னோடும் என் குடும்பத்தோடும் அதிக அக்கறையும், அன்பும், கவலையும் கொண்ட, எங்களை தங்களின் உடன் பிறவா சகோதரர்களாக ஏற்றுக் கொண்ட பல புதிய கிறிஸ்துவ சகோதரர்களையும் பெற்றுக் கொண்டுள்ளோம்.

## அனைவருக்கும் இயேசு

*"அந்த வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள அனேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்" - யோவான் 4 : 39*

தங்களுக்குள்ள கஷ்டத்தை, பிரச்சினைகளை, நோய்களை, சமாதானமின்மையை சிலர் என்னிடம் கூறும்போது நான் இப்போது அவர்களை இயேசுவிடம் வேண்டிக் கொள்ளச் சொல்லுவேன் அல்லது தேவாலயத்திற்கு வந்து ஜெபிக்கும்படி சொல்கிறேன். அப்படித்தான் என் மகனுக்கு பிஸியோதெரபி கொடுத்துக் கொண்டிருக்கும் சதீஷ் குமார் என்பவரின் பெற்றோர்கள் என் சாட்சியத்தை கேட்டபிறகு அவர்களுடைய பாண்டிச்சேரியிலுள்ள வீட்டை பல மாதங்களாக என்ன சொல்லியும் காலி பண்ண மறுக்கும் ஒரு வக்கீலைப் பற்றிக் கூறினர். அவர் இந்த வீட்டைக் காலி பண்ணினால்தான் அதை விற்று, தன் இரு பெண்களுக்கும் திருமணம் முடிக்க முடியும் என்ற நிலை. அவர் ஒரு தீவிர இந்து நண்பர், அம்மன் உபாசகர், ஏதோ ஒரு அம்மன் சக்தியால் அருள்வாக்கு, மந்திரிப்பு, விபூதி எல்லாம் கொடுப்பவர். இருந்தாலும் அவருக்கும் பிரச்சினை, சமாதானமின்மை. நாங்கள் குடும்பத்தோடு அவருக்காக பாரத்தோடு ஜெபித்தோம். நான் கேட்டுக் கொண்டபடி அவரும் தேவாலயத்தில் வந்து மனமுருக வேண்டிக் கொண்டார். வேண்டுதலைக் கேட்டு ஆண்டவர் அருள் புரிந்தார். வீட்டை காலி பண்ண முடியாது என இல்லாத சட்ட திட்டங்களை எல்லாம் பேசி இரண்டு மூன்று வருடங்களாக வம்பு செய்து கொண்டிருந்த அந்த வக்கீல் தானாகவே முன் வந்து வீட்டைக் காலி பண்ணுவதாக கூறியவுடன் இவர்களுக்கு அதை நம்பவே முடிய வில்லை. அதை சாட்சியாக திருச்சபையிலும், அனைவர் முன்பாக இதைக் கூறினார்கள். இப்போது முழுக் குடும்பமே ஆண்டவரின் அருள் வேண்டி திருச்சபைக்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் தற்போது கிறிஸ்துவுக்குள் பலப்படுத்துவது அவசியம். ஆகவே விசுவாசத்தில் பலப்பட்ட சில கிறிஸ்துவ சகோதரர்களையும், ஊழியக்காரர்களையும், அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். தொடர்ந்து அவர்களுக்காக எங்களின் குடும்ப ஜெபத்திலும் ஏறெடுத்து ஆண்டவரிடம் அவர்களை ஆசீர்வதிக்கும்படி வேண்டி வருகிறோம். இதெல்லாம் என் அமெரிக்க கிறிஸ்துவ நண்பர்களிடம் அங்கிருக்கும் போது நான் பார்த்து கற்றுக் கொண்டது.

## 40 ஆண்டு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை

*"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடத்தைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்" - 1 பேதுரு 1:15*

நாம் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து பலப்படுவதையோ, நம் கெட்ட பழக்கங்களை விட்டொழிந்து பலப்படுவதையோ சாத்தான் விரும்புவதில்லை. அவன் மிகவும் தந்திரக்காரன். அவன் பிடியிலிருந்து தப்புவது மிகவும் கடினம். அவனுடைய பிடி இறுகியிருப்பதாலேயே அவ்வளவு எளிதாக எந்த கெட்ட பழக்கத்திலிருந்தும் விடுபட முடிவதில்லை. நான் செய்த பாவங்களை எல்லாம் அறிக்கையிட்டு அழுது வருந்தி கர்த்தரிடம் மனதார மன்னிப்பு கேட்டு அவரை நான் மிகவும் பலமாக விசுவாசித்த போதிலும், என்னால் என் குடிப்பழக்கத்திலிருந்து மட்டும் விடுபட முடிய வில்லை. நான் விமானப் படையில் இருந்தவன். அங்கு இந்த குடிப்பழக்கம் ஏற்பட்டு

அது கடந்த 40 ஆண்டுகளாக தொடர்ந்து அதற்கு நான் ஒரு அடிமையாகவே ஆகியிருந்தேன். நான் மிகவும் மனவலிமை உடையவன். எத்தனையோ கெட்ட பழக்கவழக்கங்கள் என்னிடம் இருந்தன. வெற்றிலை போடுதல். புகையிலை, சிகரெட், பான்பராக், பொடி போடுதல் என எல்லா விதமான கெட்ட பழக்க வழக்கங்களும் என்னிடம் இருந்தன. ஆனால் நினைத்த மாத்திரத்தில் அவைகளை நிறுத்துவேன். 2 மாதம், 3 மாதம் கழித்து ஏதோ ஒரு காரணத்திற்காக மீண்டும் அதை ஆரம்பிப்பேன். பின் விடுவேன். இதை என் மனவலிமையை சோதித்துக் கொள்ள ஒரு டெஸ்ட் என்று கூட பெருமையாக சொல்லிக் கொள்வேன். ஆனால் நான் என்ன முயன்றும் என்னால் என் குடிப் பழக்கத்தை மட்டும் நிறுத்தவே முடிய வில்லை. என் குடிப் பழக்கத்தை நானே வெறுத்தேன். இருந்தும் இரவு 9மணி ஆகி விட்டால் என்னால் அந்த டெம்டேஷனை அடக்கவே முடியாது. இறுதியாக திருச்சபையில் கர்த்தரிடம் கண்ணீர் விட்டு கதறி அழுது என்னை இக்கொடிய அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்குமாறு வேண்டிக் கொண்டேன். கர்த்தர் என் கண்ணீரைக் கண்டு கருணை புரிந்தார். அன்று முதல் இன்று வரை அந்த நினைவு கூட இல்லாதபடிக்கு எனக்கு பரிபூரண விடுதலையை கொடுத்து ஆசீர்வதித்தார். கண்ணீரோடு கர்த்தரிடம் எதைக் கேட்டாலும் அவர் அதை நமக்கு வாய்க்கப் பண்ணுவார் என்பது உறுதி. பரிசுத்த வாழ்வை பரமன் இயேசு எனக்கு தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

## நம் திறமையால் அல்ல. கர்த்தரின் கிருபையால் மட்டுமே எதுவும் நடக்கும்

*"விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல. இரங்குகிற தேவனாலேயாம்" - ரோமர் 9 :16*

கிறிஸ்துவுக்குள் வந்த பிறகும் நான் பல விஷயங்களில் பக்குவப் படாமலேயேதான் இருந்தேன். கர்த்தர் நம் தகப்பனாக இருந்து நம் தவறுகளை மன்னித்து, பரிசுத்தப்படுத்தி, ஒவ்வொன்றாய் நமக்கு புரிய வைத்து, பக்குவப் படுத்துகிறார். நாம் செய்ய வேண்டுவதெல்லாம் நம்மை முழுமையாக அவரிடம் ஒப்புக் கொடுப்பது மட்டுமே. மற்றவைகளை அவர் பார்த்துக் கொள்வார். அமெரிக்காவிலிருந்து வந்த பிறகும் நான் பல விஷயங்களில் கர்த்தரைக் கேட்காமலேயே என் சொந்த முயற்சியிலும், திறமையிலும் நம்பிக்கை வைத்து செயல் பட்டேன். கர்த்தரின் கிருபை இன்றி நம் வாழ்வில் எதுவும் நடவாது என்பதை ஆண்டவர் எனக்குப் புரிய வைத்தார். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை கார்த்திக்கு ஸ்டெரப்டோமைசின் ஊசி போட வேண்டியிருந்தது. சாம் அங்கிளின் மருமகள் அனி குரோம்பேட்டையிலிருந்து தவறாமல் வந்து ஊசி போட்டுக்கொண்டிருந்தாள். சில நாட்களில் ஆஸ்பத்திரியில் செகண்ட் ஷிப்டு டியூட்டியை முடித்து விட்டு 10 மணிக்கு மேல் வந்தும் சில நாட்களில் மழையில் நனைந்து வந்தும் கூட தவறாமல் ஊசி போடுவாள். அவளால் தனியாக குரோம்பேட்டையின் ஒரு கார்னரிலிருந்து வரமுடியாது. ஆகவே அவளுடைய கணவனும் கூட வரவேண்டும். இல்லையேல் சாம் அங்கிள் கூட்டி வரவேண்டும். ஒரு நாள் அல்ல. இரண்டு நாள் அல்ல. தொடர்ந்து ஊசி போட வேண்டும். இருந்தும் அத்தனை பாடுகளையும் மிகவும் சிரித்த முகத்தோடு அவர்கள் அனைவருமே செய்வார்கள். தன்னலமற்ற தாய்மை உள்ளம் கொண்ட அந்தக் கிறிஸ்துவ அன்பை என்னால் எப்போதுமே மறக்க முடியாது. ஊசி போட பக்கத்திலேயே ஒரு நர்ஸ் கிடைத்து விட்டால், அனிக்கும் சாம் அங்கிளுக்கும் சிரமம் இல்லாமல் இருக்குமே என்று அருகிலேயே வேறு ஒரு நர்சுக்காக ஒரு மாதமாக நான் முயற்சி பண்ணியும் எனக்குக் கிடைக்க வில்லை. பிறகு தான் என் புத்தியில் உறைத்தது. ஆஹா.. இதுவரை நம் கர்த்தரிடம் கேட்காமலேயே நம் முயற்சியில் மட்டுமே நம்பிக்கை வைத்து முயற்சி பண்ணியதால் தான் கிடைக்க வில்லை. எவ்வளவு பெரிய மடத்தனம் இது என்று வருத்தப்பட்டு ஆண்டவரிடம் மன்னிப்புக் கேட்டு அவரிடம் ஊசி போட ஒரு நர்சை பக்கத்திலேயே கிடைக்கும் படி ஆசீர்வதிக்குமாறு வேண்டினேன். அன்றே எனக்கு ஒரு நர்ஸ் கிடைக்கவும் செய்தார். அதுமட்டுமல்ல அந்த நர்ஸ் ஊசி போட பணம் எதுவும் தரவேண்டாம் எனக் கூறியது மட்டுமல்லாமல், இன்று எங்களுக்கு நல்ல குடும்ப நண்பராகவும் ஆகிவிட்டார். அதே போல் கார்த்திக்கு நான் அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்த மிக முக்கியமான ஒரு மருந்து தீர்ந்து விட்டது. அந்த மருந்துக்கு மாற்று மருந்தாக பல டாக்டர்களிடமும், மருந்துக் கடைகளிலும் கேட்டு நானே முயற்சி செய்து வந்தேன். ஒரு மாதத்திற்கு மேல் ஆகியும் எனக்கு சரியான மாற்று மருந்து கிடைக்கவில்லை. கடைசியில் எனக்கு புத்தி வந்து கர்த்தரிடம் மண்டியிட்டு எனக்கு உதவும்படி கேட்டேன். ஒரே நாளில் TB சானடோரியத்தில் ஒரு டாக்டரை சந்திக்கவும் அவர் மூலம் சரியான மாற்றுமருந்துகிடைக்கவும் ஆண்டவர் அருள் புரிந்தார். நன்றி கர்த்தாவே நன்றி. எங்களுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து வருவதற்காக கோடானுகோடி நன்றி ஆண்டவரே!

## என் மனைவிக்கு அற்புதர் இயேசுவின் மூலம் தெய்வீக சுகம்

*"உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம்*
*ஒன்றுமில்லை" ஏரே 32 :17*

நம் தேவைகள் அனைத்தையும் அறிந்தவர் கர்த்தர். அவைகளை அவர் தமது சித்தப்படி அவருக்கேற்ற உரிய நேரத்தில் நமக்கு வாய்க்கப் பண்ணுவார். நாம் கேட்கும் நேரத்தில் அல்ல. எது சரி, எது எப்போது நமக்கு நன்மை அளிக்கும் என்பதை அறிந்தவர் இயேசுகிறிஸ்து. சில சமயம் சில ஆசீர்வாதங்கள் நமக்கு கால தாமதம் ஆகலாம். ஆனாலும் நாம் முழு விசுவாசத்துடன் கர்த்தரிடம் தொடர்ந்து ஜெபித்து வரவேண்டும். எனது மனைவிக்கு கர்ப்பப்பை கீழே இறங்கியுள்ளதாகவும், அதை உடனே ஆப்ரேஷன் மூலம் அகற்றி விடுவது நல்லது என்றும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே லேடி டாக்டர் கூறிவிட்டார். ஆப்ரேஷனுக்கு பிறகு பல மாதங்கள் படுக்கையில் இருக்க வேண்டும் என்றும், கனமான பொருட்களை இனி தூக்கவே கூடாது என்றும் பலர் கூறக் கேட்டிருக்கிறோம். அப்படி பலரின் அவஸ்தைகளையும் பார்த்து இருக்கிறோம். இதை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற அச்சம், தயக்கம் இவைகளாலும் என் மகளின் காலேஜ் படிப்புக்கு பிறகு செய்யலாம், கார்த்தி எழுந்து நடந்த பிறகு செய்து கொள்ளலாம் என்று இப்படியே ஆப்ரேஷனை தள்ளிப் போட்டுக் கொண்டே, மறுபடியும் கர்த்தரிடம் ஆபரேஷன் இல்லாமல் இந்த கோளாறை குணப்படுத்த வேண்டுமாய் பாரத்தோடு தொடர்ந்து ஜெபித்து வந்தோம். ஆனால் நாளுக்கு நாள் என் மனைவியின் நிலை மிக மோசமாகிக் கொண்டே போயிற்று. டாக்டரிடம் போனால் அவர் எங்களை கண்டபடி திட்டி உடனடியாக ஆப்ரேஷன் செய்யவில்லை என்றால் இன்னும் நிலைமை மோசமாகி விடும்

என்று கூறிவிட்டார். ஆப்ரேஷனே இல்லாமல் குணமாக்கும்படி நாங்கள் கர்த்தரிடம் தொடர்ந்து ஜெபித்து வந்தாலும் எல்லா விஷயங்களுமே ஆபரேஷனை நோக்கியே போய்க் கொண்டிருந்தது. ஆப்ரேஷனுக்கு தேதியை முடிவு செய்து, அன்று காலையில் ஆஸ்பத்திரியிலும் என் மனைவியை சேர்த்து விட்டோம். இருந்தும் கர்த்தரின் மேல் விசுவாசம் வைத்து தொடர்ந்து ஜெபித்து வந்தோம். சபையில் அன்று நடந்து வந்த உபவாச ஜெபத்திலும் என் மனைவிக்காக ஜெபித்தனர். எங்கள் சபையின் பாஸ்டர் அன்று காலையில் வந்து மிகவும் பாரத்தோடு ஜெபித்துச் சென்றார். ஒரு நாளைக்கு முன்பு எங்கள் வீட்டின் அருகில் உள்ள ஒரு பிரேயர் செல் ஜெபத்திலும் என் மனைவிக்காக பிரார்த்தனை ஏறெடுத்தனர். அன்று அந்த ஆஸ்பத்திரியில் என் மனைவியின் ஆப்ரேஷன் மட்டுமே நடக்கவிருந்தது. அதற்காக மட்டுமே Dr. சக்கரவர்த்தி என்பவரை செங்கற்பட்டிலிருந்து வரவழைத்து இருந்தனர். மதியம் 1.40க்கு என் மனைவியை ஆபரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் சென்றனர். மயக்க மருந்தால் மயக்கம் வரும் வரை ஜெபித்துக் கொண்டே இருந்திருக்கிறாள். வெளியே நான் நொறுங்குண்ட இருதயத்தோடு ஜெபித்துக் கொண்டு இருந்தேன். ஆப்ரேஷன் தியேட்டரை விட்டு 2.40க்கு என் மனைவியை வெளியே அழைத்து வந்தார்கள். வெளியே வந்த டாக்டர்களிடம் ஆப்ரேஷன் வெற்றிகரமாக முடிந்ததா என்று நான் கவலையோடு கேட்டேன். ஆப்ரேஷனே பண்ணவில்லை. பண்ண வேண்டிய அவசியமே இல்லாதபடி கர்ப்பப்பை சுருங்கி அதன் இடத்திலேயே இருந்தது. ஆகவே செய்யவில்லை. அதுமட்டும் அல்ல. மலக்குடலும், சிறுநீர்ப்பையும் சிறிது இடம் மாறி இருந்தது. அதையும் சரிசெய்தாயிற்று என்றார். எனக்கு என் கண்ணீரை அடக்கவே முடியவில்லை. கர்த்தர் அனைவரின் ஜெபத்தையும் கேட்டு கடைசி நிமிடத்தில் ஆபரேஷனே இல்லாமல் கர்ப்பப்பையை சரிசெய்து விட்டார். அவரால் இயலாத காரியம் என்று ஒன்று உண்டா? கர்த்தர் இதை ஏன் ஆரம்பத்திலேயே செய்யாமல் கடைசி நிமிடம் வரை நம்மை டென்ஷனிலும் கவலையிலும் ஆழ்த்தி பின் கடைசியில் சுகம் தர வேண்டும்? நம் விசுவாசத்தை சோதிக்கிறாரா? கர்த்தர் நினைத்திருந்தால் லாசருவை இறக்க விடாமல் அவனுடைய நோயைக் குணப்படுத்தியிருக்க முடியாதா? அவனை இறக்க விட்டு நான்கு நாளைக்குப் பிறகு ஏன் நாற்றமெடுத்த லாசருவை உயிர்ப்பிக்க வேண்டும்? லாசருவின் நோயை குணப்படுத்துவது பெரிய அதிசயமா? இறந்தவனை உயிர்ப்பிப்பது பெரிய அதிசயமா? எதில் ஆண்டவரின் அற்புதம் அதிகமாக வெளிப்படுகிறது? கர்த்தரின் கருணையை நினைக்கும் போது கண்ணீர் வெள்ளமென பெருக்கெடுக்கின்றது.

## இந்த நோயை கொடுத்ததற்காக இயேசுவுக்கு நன்றி- கார்த்தியின் அழுகையிலும் ஆனந்தம்

*"அதி சீக்கிரத்தில் நீங்கும் உபத்திரவம்...நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" - II கொரி 4 : 17*

கார்த்தி இப்போதும் வீல் சேரில்தான் உள்ளான். ஆனால் கர்த்தரின் மேல் எங்களுக்கு பரிபூரண விசுவாசம் உள்ளது. கர்த்தர் அவருடைய நேரத்தில் கண்டிப்பாக கார்த்தியை பலப்படுத்தி எழுந்து நடக்க வைத்து, அவருடைய நாமத்திற்கு துதி, கனம், மகிமை அனைத்தும் கொடுக்கும்படிக்கு ஒரு வல்லமையான சாட்சியாக எழுந்து நிற்க வைப்பார். கிறிஸ்துவுக்குள் நாங்கள் வருவதற்கு முன்பாக கார்த்தி இருந்த நம்பிக்கையற்ற, பரிதாபகரமான நிலையையும், அவனுடைய தற்போதைய நிலையையும் நினைத்துப் பார்க்கிறேன். கர்த்தரின் கிருபையால் இழந்த ஒவ்வொன்றையும் குறைவு படாமல் திரும்பப் பெற்று, தினமும் பலப்பட்டு தேறி ஒரு நீண்ட பாதையை கடந்து வந்துள்ள கார்த்தி என்னிடம் கூறுகிறான். அப்பா..எனக்கு இந்த நோயையும், இவ்வளவு துன்பத்தையும் கொடுத்தற்காக இறைவனுக்கு நாம் நன்றி கூற வேண்டும் இல்லையேல் இயேசுகிறிஸ்துவின் பக்கம் நாம் திரும்பியிருக்கவே மாட்டோம். கர்த்தரின் இந்த குறைவில்லாத கிருபையும், கருணையும், அன்பும் நமக்கு கிடைத்திருக்காது. நாம் இப்போது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட, மிகவும் சந்தோஷகரமான ஒரு குடும்பம் இல்லையா என்றான். எத்தனை துன்பங்கள், கஷ்டங்கள், பிரச்சினைகள், நோய் நொடிகள் வந்தாலும் அவைகள் அனைத்துக்கும் ஊடே ஒரு சமாதானத்தையும், ஒரு தன்னம்பிக்கையையும், கர்த்தரின் அரவணைப்பில் ஒருபாதுகாப்பையும் உணர்கிறோம். என் பாவத்தின் சுமையையும், பாரத்தையும் அவர் ஏற்றுக் கொண்டு என் உள்ளத்தை அவர் லேசாக்கி விட்டார்.

## அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு...

*"....இப்பொழுதோ கர்த்தருக்குள்
வெளிச்சமாயிருக்கிறீர்கள்..." - எபே. 5 : 8*

இந்து மத வேதங்களும் சொர்க்கத்தைப் பற்றியும் நரகத்தைப் பற்றியும், பாவங்களைப் பற்றியும், அதற்குரிய பலன்களைப் பற்றியும் சொல்லத்தான் செய்கின்றன. இருந்தும் பயமின்றி மக்கள் தொடர்ந்து பாவங்களை செய்து கொண்டேதான் இருக்கின்றனர். சில சமயம் இறைவனுக்கே அதற்காக லஞ்சம் கொடுத்து, மன்னிப்பு பெற்று விட்டதாக எண்ணி தொடர்ந்து அந்த பாவங்களையே செய்து வருகின்றனர்.

நான் விமானப் படையில் இருந்த போது ஒரு சமயம் இராணுவ முகாம்களில் வழக்கமாக நடைபெறும் தம்போலா என்ற ஒரு சூதாட்ட பொழுது போக்கில் என்னையும் ஒரு நிர்வாகக்குழு மெம்பராக சேர்த்துக் கொண்டனர். வெகு சீக்கிரமே அந்த தம்போலா நிர்வாகக் குழுவினர் மிகப் பெரிய அளவில் பண மோசடி செய்து வருகின்றனர் என்பதை நான் கண்டு பிடித்து, அதை மேல் அதிகாரிகளிடம் கூறப்போவதாகச் சொன்னேன். முதலில் அப்படி எதுவும் செய்ய வில்லை என மறுத்த அவர்கள் நான் ஆதார பூர்வமாக நிரூபித்து கூறியவுடன் எனக்கும் அதில் ஒரு பங்கு தருவதாகக் கூறி என்னை அவர்கள் வலையில் விழ வைத்து என் வாயை அடைத்து விட்டனர்.

என் குற்ற உணர்வை குறைப்பதற்கும், இதனால் நான் எந்த பிரச்சினைகளிலும் மாட்டாமல் காப்பாற்றப்படவும், ஆஞ்சநேயருக்கு மாதாமாதம் வடை மாலை சாத்தி, அவரையும் என் தவறான நடவடிக்கைக்கு ஒரு பங்காளியாக ஆக்கிக் கொண்டேன். மேலும் வியாழக்

கிழமைகளில் விரதம் இருந்து கந்தசஷ்டி கவசம் சொல்லி நான் தொடர்ந்து செய்த பாவத்திற்கு பரிகாரம் தேடிக் கொண்டேன். எனக்குக் கிடைத்த தொகையில் ஒரு பகுதியை கோவில்களுக்கு செல்வதற்கும், உண்டியலில் போடுவதற்கும் தனியாக எடுத்து வைத்தேன். என்னுடைய பக்தி பாவ வாழ்க்கையிலிருந்து என்னைத் தடுத்து மீட்கவில்லை. மாறாக அந்தப் பாவத்திற்கு பரிகாரம் செய்து விட்டு, பாவத்தை தொடர்வதற்கே தூண்டியது. இப்படி நான் மட்டும் அல்ல. பலர் இப்படித்தான் தவறான வழியில் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியை இறைவனுக்கே லஞ்சமாகக் கொடுத்து, அவரையும் அதற்குப் பார்ட்னராக ஆக்குவதையும் பார்த்து இருக்கிறேன். 58 வயது வரையிலும் நான் தெய்வ பக்தி உள்ளவனாக, வேதங்கள் படிப்பவனாக, சடங்கு சம்பிரதாயங்களை தவறாமல் அனுசரித்து கோயில், குளம் என்று போய் வந்து கொண்டு இருக்கும்போதே பல பாவங்களையும் தெரிந்தே செய்து வந்துள்ளேன்.

தான் என்ற கர்வம், மமதை, எவரையும் எடுத்தெறிந்து பேசி அபிப்பிராயம் சொல்வது, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவது, பொய், பித்தலாட்டம், பழி வாங்கும் எண்ணம், எதையும் மன்னிக்காத சுபாவம், அடுத்தவர் மனதை புண் படுத்துவது போன்று பேசுவது, சுயநலம், பொறாமை, பொறுமையின்மை, அடக்கமின்மை, மனவிகாரங்கள், வக்கிர புத்திகள், இப்படி வெளியரங்கமாயும், உள் அரங்கமாயும், எத்தனையோ பாவங்களை செய்துள்ளேன். அதுவும் தெய்வ பக்தி உள்ளவனாக இருந்து கொண்டு எல்லா தெய்வங்களையும் வணங்கிக் கொண்டு! ஆனால் இப்போது – கிறிஸ்துவுக்குள் வந்த பிறகு தான் அந்த பாவ வாழ்க்கையின் பாரத்தை, அவலத்தை, அசுத்தத்தை, தாக்கத்தை உணர்ந்தேன். பரிசுத்தத்தின் மகிமையையும், முக்கியத்துவத்தையும், உள்ளத் தூய்மையையும் புரிந்து கொண்டு , அப்படியே வாழ வாஞ்சையும் உறுதியும் பூண்டேன்.

## இகத்தில் பரலோக வாழ்வு

*"....உம்மை நம்புகிறவர்களுக்கு..உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது" – சங் 31:19*

இப்போது நான் ஒரு பாவத்தைச் செய்ய பல லட்ச ரூபாயைக் கொடுத்தாலும், அதை நான் மனசாலும் தொடமாட்டேன். கிறிஸ்தவம் எனக்கு அருளிய மிகப் பெரிய ஆசீர்வாதமும், கிருபையும் அதுதான். கர்த்தர் பரிசுத்தராக வாழ்ந்து, என்னை மட்டுமின்றி கோடானு கோடிப் பேரை அப்படியே பரிசுத்தவான்களாக, அவரின் சாயலாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார். அதற்காக அவருக்கு ஸ்தோத்திரம். அந்த பரிசுத்தத்தில் நான் இதுவரை அனுபவித்திராத ஒரு சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அமைதியையும், அந்த பரலோக வாழ்க்கையையும் அனுபவிக்கிறேன்.

## இயேசு உங்களையும் இரட்சிப்பார்

*"அவருடைய இரட்சிப்பு அவர்களுக்குப் பயந்தவர்களுக்கு சமீபமாயிருக்கிறது" – சங் 85 : 9*

கிறிஸ்தவம் ஒரு மதம் அல்ல. அது – இறை நிலை அடைய, பரிசுத்த வாழ்வு வாழ ஒரு மார்க்கம். பைபிள் ஒருவன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு கர்த்தரின் ஜீவனுள்ள வார்த்தைகளை உள்ளடக்கிய ஒரு புனித நூலாகும். கர்த்தர் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் சொந்தமல்ல. ஜாதி, மதம், மொழி பேதமற்ற, பிறந்த, இனி பிறக்கப் போகிற அனைத்து மானுட ஜாதிக்காகவும், அவர் கல்வாரி சிலுவையில் தன் இன்னுயிரை நீத்து மீண்டும் உயிர்த்தெழுந்து இன்றும் என்றும் நம்மை இரட்சிக்க இருகரம் நீட்டி நம்மை அழைக்கிறார். அந்த அற்புதரிடம், பரிசுத்தரிடம், சர்வ வல்லமையான ஒரே மெய்யான தேவனிடம் நம்மை ஒப்படைப்போம். ஒளிமயமான வாழ்வை இம்மையிலும், மறுமையிலும் கண்டு அனுபவிப்போம். எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பல அற்புத, அதிசயங்களை செய்து அந்தகாரத்திலிருந்து எங்களை ஆச்சரியமான ஒளிக்கு வரவழைத்த ஒரே தெய்வமாகிய இயேசு கிறிஸ்து இதை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் நிச்சயம் ஆசீர்வதிப்பார்; விசுவாசியுங்கள். இயேசுவை ருசித்துப் பாருங்கள். நிம்மதியும், சமாதானமும், நன்மைகளும் உங்களை தேடி ஓடி வரும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது என்ற வேத வசனம் (சங் 34:10) சத்தியமானது என்பதை கண்டறிவீர்கள். கர்த்தரின் பரிசுத்த நாமம் மகிமைப் படுவதாக. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இந்த சாட்சி பற்றி கருத்து கூற விரும்புகிறவர்கள் கீழ் கண்ட முகவரியில் என்னை தொடர்பு கொள்ளலாம். இதை நீங்கள் படித்து முடித்த பின் உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் படிக்க கொடுங்கள்.

கர்த்தரின் கிருபை உங்களோடு என்றும் இருப்பதாக!

**சு. தாயப்பன்**
12, ஜி.டி நாயுடு தெரு, பாலாஜி அவென்யு I,
சிட்லப்பாக்கம் மெயின் ரோடு,
சேலையூர் போஸ்ட், சென்னை – 600 073.
தொலைபேசி : (044) 223 4526
e-mail : sakthiprabha@yahoo.com